Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-22 | 07-11-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -263

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்



இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247

# யுத்தநிறுத்த உடன்பாட்டை புலிகள் மீறி வருகின்றனர்!

## இந்திய சனாதிபதியிடம் சந்திரிகா தெரிவிப்பு

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கடந்த மூன்று வருடங்களாக போர் நிறுத்த உடன்பாடு ஒன்று அமுலில் உள்ள போதும் விடுதலைப்புலிகள் இந்த உடன்பாட்டை மீறி வருவதாக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்திய சனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். எனினும்விடுதலைப்புலிகள் போர் ஒன்றுக்கான ஆயத்தத்தில் ஈடுபடவில்லையென்றும் தெரிவித்துள்ளார். நேற்று புதுடில்லியில் உள்ள ராஜ்பவனில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.**



இந்தச் சந்திப்புத் தொடர்பாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என்று சனாதிபதி சந்திரிகா இந்தச் சந்திப்பின் பின்னர் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது. அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால யோசனை தொடர்பாகவும் இரண்டு சனாதிபதிகளும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் கடலில் மீன்பிடியில் ஈடுபடும் படையினரின் நடவடிக்கைகளில் தாம் மனிதாபிமானமாகவே நடந்துகொள்வதாகவும், அதனடிப்படையிலேயேதான் தமது படையினர் நடந்துகொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.



# மட்டு. ஓய்வு பெற்ற ஆசிரியரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு நகரில் அனுமார் கோயிலடிச் சந்தியிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மீது நேற்றிரவு 7.00 மணியளவில் அடையாளம் தெரியாத சில நபர்கள் கைக்குண்டு வீசித் தாக்கியுள்ளனர்.

இக் குண்டு வீட்டின் முன் பக்கம் விழுந்து வெடித்ததினால் வீட்டில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்புமில்லை. இருப்பினும் வீட்டின் சிறு பகுதி சேதமடைந்துள்ளது. இத் தாக்குதலின் பின்னணி என்னவென்று இன்னமும் தெரியவரவில்லை.

# மருதனார் மடம் சந்திப் பகுதியில் தீப்பற்றி எரிந்த மின் கம்பிகள்

(நல்லூர்)

மருதனார் மடம் சந்தியிலுள்ள மின்சாரக் கம்பிகள் திடீரென எரிய ஆரம்பித்ததினால் அப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் பதட்டம் அடைந்தனர்.

நேற்றுப் பகல் 10.00 மணியளவில் மருதனார் மடம் சந்தியில் உள்ள மின்கம்பங்கள் பலவற்றுடனும் இணைக்கப்பட்டிருந்த கம்பிகள் எரியத் தொடங்கின.

இதனால் மருதனார் மடம் சந்தைப் பகுதியில் நின்றவர்களும், வீதியால் போக்குவரத்துச் செய்தவர்களும் பெரும் பதட்டம் அடைந்து விலகிச் சென்றனர்.

சில இளைஞர்கள் துணிச்சலுடன் கம்பிகள் மீது ஈரச் சாக்குகளை எறிந்து எரிந்த மின்கம்பிகளை அணைத்தமையால் பாரிய அளவில் ஏற்படவிருந்த அனர்த்தமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

மின்கம்பிகள் தீப்பற்றி எரியத் தொடங்கியதைக் கண்ட மக்கள் சுன்னாகம் மின்சாரசபைக்குத் தொலை பேசி மூலம் அறிவித்த போதிலும் மின்சாரத்தை துண்டிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் காயம்

(அலுவலக செய்தியாளர்)

வேகமாக வந்த கைஏஸ் வாகனமும், உந்துருளியும் மோதிக் கொண்டதில் உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்துள்ளதுடன், உந்துருளி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

மேற்படிச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் பௌசி வீட்டில் ஒன்று கூடல்

இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் இன்றைய தினம் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியின் வீட்டில் சந்திக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்தக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினர் தனித்தரப்பாக பங்கு பற்றுவது தொடர்பாக கலந்துரையாடப்படவே இன்றைய தினம் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. ஏற்கனவே இது போன்ற சந்திப்பு கடந்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் காலத்திலும் நடைபெற்றது.

அதேவேளை அண்மையில் முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து வந்து சந்திரிகாவுடன் இணைந்த மூன்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் சனாதிபதியுடன் பேசும் போது தாம் மூன்றாம் தரப்பினராக கலந்து கொள்வது பற்றி கொள்கையளவில் சனாதிபதி இணங்கியிருப்பதாகவும் தெரிவித்தனர். (32)

– கடும் எதிர்ப்பையும் மீறி –

# குருநாகல் தமிழ்ப்பாடசாலையில் பௌத்தபிக்குவின் ஈமக்கிரியைகள்

சிறிலங்கா அரசின் சட்டம், சமாதானம், மக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தமிழ்ப் பாடசாலையொன்றை சுடுகாடாக்கி சாதனையொன்றை குருநாகலையில் நடத்தியுள்ளார்.

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலயத்தின் அருகில் அமைந்துள்ள விகாரையின் பிரதமகுரு அண்மையில் காலமானார். அவரின் இறுதிக் கிரியைகளை பிரதியமைச்சர் அப்பாடசாலையின் தற்காலிக அதிபரும், அரச ஆதரவாளருமான அதிபரின் துணையுடன் பாடசாலை மைதானத்தில் தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பலவந்தமாக நடத்தியுள்ளார். இந்தப் பாடசாலையின் வளவினுள் விநாயகர் ஆலயமொன்றும் அமைந்துள்ளது. இந்த விநாயகர் ஆலயத்தின் முன் தேரரின் இறுதிக

(14ஆம் பக்கம் பார்க்க)

# புதுக்குடியிருப்பில் கனத்த மழை வர்த்தக நிலையங்கள் வீடுகள் சேதம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று மாலை கடும் மழை பொது மக்களுக்கும் வணிகர்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. சுமார் 3மணி நேரம் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையால் பல வணிக நிலையங்களின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. பல வணிக நிலையங்களுக்குள்ளால் வெள்ளம் பாய்ந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல குடும்பங்கள் இக் கடும் மழை காரணமாக பாதிப்படைந்துள்ளது. பல வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. தற்பொழுதும் வெள்ளம் வீடுகளில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை புதுக்குடியிருப்பு- மாத்தளன் வீதி, புதுக்குடியிருப்பு-முல்லை- வீதி, புதுக்குடியிருப்பு பரந்தன் வீதிக்கு மேலால் வெள்ளம் பாய்ந்து கொண்டு இருப்பதால் தொடர்ச்சியாக மக்கள் போக்கு வரவு செய்வதில் பெரும் இடையூறுகள் ஏற்பட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

முழங்காவில் கரியாலை நாகபடுவான் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமுற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பபட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு

(14ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரிலும் வெள்ளத்தால் பாதிப்பு

மன்னாரில் கடந்த நாட்களாக பெய்த மழையினால் மக்களின் அன்றாட வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீதிகள் யாவும வெள்ளத்தினால் மூடியுள்ளது.

குறிப்பாக மூர் வீதி, பள்ளி முனை வீதி ஆகிய வீதிகளால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளனர். அத்துடன் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களிலும் வகுப்புக்கள் இடம் பெறவில்லை, மீனவர்களும் கடலுக்குச் செல்லவில்லை. இறுதியாக மன்னாரில் பெய்த மழையின் அளவு 46.8 மில்லி மீற்றர் ஆகும். தொடர்ந்து மழை பெய்து வருவதால் சாந்திபுரம், பள்ளிமுனை ஆகிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளது. (மி)

# வெள்ளப்பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு உதவ த.பு.க.நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

தற்பொழுது தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான மீட்புப் பணி, சமைத்த உணவு வழங்கல், குடிநீர் விநியோகம் போன்ற உதவிகளை மாவட்ட ரீதியில் அரச அதிபருடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற்கொள்வதற்கான ஏற்புடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே வெள்ள பாதிப்புக்குள்ளாகும் மக்கள் விபரங்க்ள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட செயலகங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (கு)







கண்டாவளை வெலிக்கண்டல் பாலத்தூடான வாகனப் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. எனினும் உந்துருளிகள், ஈருருளிகள் மட்டும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதையும், பாலத்தை விரைவாக அமைக்க, பொருட்கள் இறக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படம் - செல்வா)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

முத்துராசா அருளேஸ்வரன் நல்லூர் பூநகரி என்பவருடைய தே.அ.அட்டை, நிரந்தரப்பயண அனுமதி அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன 04.11.2004 ஆம் திகதி வட்டக்கச்சி வீதிக்கும் காக்கா கடைச்சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநா தம்பணிமனை அல்லது மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பணியகத் தில் ஒப்படைக்க வேண்டுகிறேன். தகவல் மு.அருளேஸ்வரன். (5250)

### பெயர் மாற்றம்

வட்டக்கச்சி, ஆறுமுகம் வீதி, இல.201 இல் நிரந்தரமாக வசிக்கும் அன்ரன் நளினிகாந்த் ஆகிய நான் எனது பெயரினை 2004-11-01 திகதியிலிருந்து அன்ரன் மதன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன். நண்பர்கள், உற வினர்கள் இப்பெயரிலேயே என் னுடன் தொடர்புகளை வைக்கவும். அன்ரன் மதன். (4931)

### பற்சிகிச்சை நடைபெறாது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரிலுள்ள முல்லை மாவட்ட வைத்தியசா லையில் பற்சிகிச்சை மறு அறிவித் தல் வரும்வரை தற்காலிகமாக நடைபெறாது என மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார். (20)

### தவறிவிட்டது

செல்வரட்ணம் நிர்மலராஜன் 91/A மாணிக்கபுரம் விசுவமடு என்பவரது தே.அ.அட்டை 692613872V, நிரந்தரப் பயண அனுமதி அட்டையும் 13.10.2004 விசுவமடுவிற்கும் றெட்பானாவிற் கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் விசுவமடு வாணிவிலாசில் ஒப்படைக்கவும் தகவல் செ.நிர்மலராஜன். (5252)

### விற்பனைக்கு உண்டு

நல்ல இன பசு, நாம்பன் மாடு கள் விற்பனைக்கு உண்டு. ந.குலம் 226/2 திருவையாறு. (5251)

### கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நகர வர்த்தகர்க ளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா நகரின் சுகாதார நிலைமைகள் தொடர்பாகவும், வர்த்தகர்கள் சுகாதாரத்தைப் பேண ஒத்துழைக்கும் நடைமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ள தால் சகல வர்த்தகர்களையும் குறிப்பிட்ட நிகழ்விற்கு சமுகம ளிக்குமாறு நகரசபையினர் கேட் டுள்ளனர். (10)

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல்-கார்த்திகை 2004

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்பு கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைபெறும். 2004 ஆம் ஆண்டு வரை மீளளிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டோரில் இது வரை மீளப்பெறாதோரும் ஏதாவது மீளளிப்பு நிலையத்தில் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

01). வன்னி மாவட்டம்

13.11.2004(சனி)

| | | | |
|---|---|---|---|
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | நல்லூர்-பூநகரி | காலை | 8.30 மணி |
| முழங்காவில் மகாவித்தியாலயம் | முழங்காவில் | மு.ப | 09.45 மணி |
| விடத்தல்தீவு றோ.க பாடசாலை | விடத்தல்தீவு | மு.ப | 11.30 மணி |
| கறுக்காய்க்குளம் அ.த.க பாடசாலை | கறுக்காய்குளம் | பி.ப | 12.30 மணி |

14.11.2004 (ஞாயிறு)

| | | | |
|---|---|---|---|
| மாங்குளம் மகாவித்தியாலயம் | மாங்குளம் | காலை | 08.00மணி |
| ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் | ஒட்டுசுட்டான் | மு.ப | 9.30 மணி |
| நெடுங்கேணி மகாவித்தியாலயம் | நெடுங்கேணி | மு.ப | 10.30 மணி |
| வித்தியானந்தாக் கல்லூரி | தண்ணீரூற்று | ந.ப | 12.30 மணி |
| ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | புதுக்குடியிருப்பு | பி.ப | 02.30 மணி |
| விசுவமடு மகாவித்தியாலயம் | விசுவமடு | பி.ப | 04.00 மணி |

15.11.2004(திங்கள்)

| | | | |
|---|---|---|---|
| வருவாய்ப்பகுதி செயலகம் | புளியங்குளம் | காலை | 08.30 மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் | மல்லாவி | மு.ப | 11.30 மணி |
| அக்கராயன் மகாவித்தியாலயம் | அக்கராயன் | பி.ப | 01.30 மணி |
| கிளி மத்திய கல்லூரி | கிளிநொச்சி | பி.ப | 03.30 மணி |

02)யாழ்.மாவட்டம்

இடம்: முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம்:காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை 17.11.2004 (புதன்) நல்லூர் உடுவில். 18.11.2004 (வியாழன்) யாழ்ப்பாணம். கோப்பாய், தெல்லிப்பளை. 19.11.2004 (வெள்ளி)மானிப்பாய் சங்கானை, காரைநகர், வேலணை, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி. 20.11.2004(சனி)கரவெட்டி பருத்தித்துறை, சாவகச்சேரி.

## தபால் ஏற்றிச் செல்லும் வாகனம் பழுது முல்லை.தபால் சேவை பாதிப்பு

வடபகுதிக்கு வெளியே இருந்து முல்லை.மாவட்டத்திற்கு வரும் தபாற் பொதிகள் அண்மைக் காலமாக தாமதமாகவே முல்லை. மாவட்ட தபால் அலுவலகத்திற்கு கொண்டு வரப்படுவதாக முல்லை மாவட்ட தபால்மா அதிபர் தெரி வித்தார். அவ்வாறு பிந்திவரும் தபாற் பொதிகள் பிரிக்கப்பட்டும், துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளுக்கு உடன் அனுப்ப முடி யாது கடந்த மூன்று நாட்களாக இவை தேங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

தபாற் பொதிகளை ஏற்றிச் செல்லும் வாகனம் பழுதடைந்ததே இதற்குக் காரணம் எனவும், தெரி வித்தார். இத் தபாலகத்தில் 20ரூபா,05ரூபா முத்திரைகளுக் குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. காரணம் கேட்டபோது தாம் தபால் அத்தியட்சகர் அலுவலகத்திற்குத் தேவையான முத்திரை கேட்டு விண்ணப்பித்தபோதும் 50 சதம், ரூபா 16.50 சதம் முத்திரையும் மட்டுமே கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதா கவும் இதனால் ஏனைய முத்திரை கேட்டு வருபவர்களுக்கு தாம் இல் லையென்று சொல்ல வேண்டிய நிலை உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார் (20)

## குளவிகொட்டியதில் இருவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை

பூநகரி 4ஆம் கட்டையில் உள்ள நெடுங்குளக் கிராமத்தில் கடந்த வியாழன் பி.பகல் 2.20 மணிக்கு கருங்குளவி தாக்கியதில் வீரசிங்கம் கந்தசாமி (வயது-35) என்பவர் கடுமையாக பாதிக்கப் பட்டார். இவர் உடனடியாக பூநகரி கட்டம் I வைத்தியசாலைக்கு எடுத் துச் செல்லப்பட்டு அம்பியுலன்ஸ் இருந்தும் ஓட்டுநர் இல்லாத நிலை யில் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு வேறோர் ஓட்டு நர் மூலம் கிளி.வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இதே தினம் 4 ஆம் கட்டைப்பகுதியில் வேறொ ருவரும் குளவியால் தாக்குதலுக் குள்ளாகி உந்துருளி மூலம் கிளி. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (34)

## திருவையாறில் வாகன விபத்தால் வீதிப்போக்குவரத்துத் தாமதம்

நேற்றுக் கிளிநொச்சி திரு வையாற்றுப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தினால் பயணிகள் போக்குவரத்து நீண்டநேரம் தாம தமானது.

நேற்று மாலை 3.30 மணிய ளவில் கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந் தும், வட்டக்கச்சியிலிருந்து கிளி நொச்சிக்கு சென்று கொண்டிருந்த பாரவூர்தியும் நேருக்குநேராக மோதின. கிளிநொச்சிக் குளத்திற்கு அண் மையில் திருவையாற்றுப் பகுதி யில் நடைபெற்ற இவ்விபத்தினால் அவ்வழியிலான போக்குவரத்துப் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. தற் போது பெய்துவரும் தொடர் மழையினால் கிளிநொச்சியிலி ருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற் குச் செல்லும் பிரதான சாலையில் பாலங்கள் உடைவுகளுக்குள்ளாகி புனரமைக்கப்பட்டு வரும் இதே வேளை தற்போதைய போக்கு வரத்திற்காக இவ் வழியினையே மக்கள் பயன்படுத்திவரும் இதே வேளை விபத்து ஏற்பட்ட பகுதி ஒரு வாகனம் மட்டும் பயணிக்கக் கூடிய அகலம் கொண்டதாக இருந் ததனால் மக்கள் அவ்வழியால் பய ணிக்கப் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கினர். இவ் விபத்தில் இரு வாகனங்களும் சிறு சேதத் திற்குள்ளாகின. (ச,சோ,தீ)

### 15 ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஜெயபுரம் அரசி னர் தமிழ்க்கலவன் பாடசாலை யின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி நிறைவு விழா விற்கும் பாராட்டு விழாவிற்கும் பாடசாலை முதல்வர் திருமதி ஸ்ரீ.முருகசோதி தலைமை தாங்கு வார். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் சிறப்பு விருந்தி னராக பூநகரி உதவிப் பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமாரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள் ளனர். அத்தோடு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற இப் பாடசாலையின் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (கு,தீ)

## 'விழி' மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீடு

கிளி.சுகாதார வைத்திய அதி காரி பணிமனையின் வெளியீடான விழிமருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பண் பாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இந்நிகழ்விற்கு வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமை தாங்கவுள்ளார்.

## மரம் நடுகைத் திட்டம் குறித்து உடையார்கட்டில் ஆலோசனை

உடையார்கட்டு மகாவித்தியால யத்தில் மர நடுகைத் திட்டம் தொடர்பான ஆலோசனை ஒன்று கூடல் கடந்த செவ்வாயன்று விசு மடுப் பிரதேச பொருண்மிய மேம் பாட்டு இணைப்பாளர் கார்த்திக் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உடையார் கட்டு குள பிரதான அணைக்கட்டிலிருந்து முடிவு வரையான இரு மருங்கி லும்10 மீற்றர் இடைவெளியில் மரம் நடுகை செய்வதாக தீர்மானிக் கப்பட்டது.

முந்நூறு ரூபா பெறுமதி கொண்ட கூடு அமைக்கப்பட்டு மரக்கன்றுகள் பாதுகாக்கப்படும் இதில் வேம்பு, மலைவேம்பு, இலுப்பை, வாகை, சமண்டலை, [illegible]தமரம் என்பன நடுகைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.


இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன் றன், முல்லை மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளர் பிறையாளன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (19)

## துணுக்காய் கிளிநொச்சி வலய மாணவர்களுக்கு கண்,காது பரிசோதனை

தமிழீழக் கல்விக்கழகத்தின் ஒத்துழைப்புடன் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் துணுக்காய்,கிளிநொச்சி வலயப் பள்ளி மாணவர்களுக்கு காதுகேட்கும் உபகரணம்,கண்பார்வைக் கண்ணாடி வழங்குவதற்கான பரிசோதனை முகாம் திங்கள்,செவ்வாய் நாட்களில் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நடாத்தப்படவுள்ளது. இதில் மேற்குறிப்பிட்ட வலயப்பள்ளிகளைச்சேர்ந்த தேவையான மாணவர்கள் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| 08.11.2004 (திங்கள்) | (காலை) 8.30 - 1.00(ந..ப) | மு/மாங்குளம் ம.வி.மாங்குளம். |
| | (ந..ப.) 2.00 - 8.00 (இரவு) | கிளிநொச்சி கல்விவலயம் |
| | (காலை)8.00 - 12.30 (ந.ப) | கிளி/பூநகரி ம.வி. |
| 09.11.2004 (செவ்வாய்க்கிழமை) | (ந..ப)2.00 - 8.00 (இரவு) | கிளி/தருமபுரம் ம.வி. |

## சாவு அறிவித்தல்



அமரர்

மலையப்பு செல்லையா

(விக்னேஸ்வரா வெண்மைத் தொழிலக உரிமையாளர்)

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கை வசிப்பிட மாகக் கொண்டவரும், விக்னேஸ்வரா வெண்மைத் தொழிலக உரிமையாளருமாகிய மலையப்பு செல் லையா அவர்கள் 06.11.2004 அன்று சாவடைந் துள்ளார்.


அன்னார்,மலையப்பு மரியம்மாவின் அன்பு மக னும், செல்லம்மா, சரஸ்வதி,கந்தசாமி ஆகியோரின் சகோதரரும், அப்புத்துரை, சுப்பிரமணியம் ஆகியோ ரின் மைத்துனரும், நவரட்ணம், வடிவேலு, செல்வம், கந்தசுவாமி, சந்திரன், கிளிலோகநாதன், அரியமலர், நஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். தங்கராசா வெண்மை-சங்கத்தலைவர் லோகாம்பிகை, பராசத்தி,சரஸ்வதி, தங்கவேலு, தங்கேஸ்வரி, யோகேஸ்வரி,நிர்மலா, நவநீதராசா குலநாயகம் மனோகரன், புலேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும் மாவீரர்களான நித்தி,நித்தியாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8.11.2004 திங்கட்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூத வுடல் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மருமகன், நவரட்ணம்.

(சி.10752)

# யசீர் அரபாத்தின் உடல் நிலையில் முன்னேற்றமில்லை
# உயிர் பிழைக்க வேண்டி பலஸ்தீனர் பிரார்த்தனை!



அரபாத்தின் ஆதரவாளர்கள் அரபாத்திற்குச் சிகிச்சை நடைபெறும் பிரான்ஸ் இராணுவ வைத்தியசாலையின் முன் மெழுகுவர்த்திகளை ஏற்றுகின்றனர்.

(பரிஸ்)

**பரிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் உடல் நிலை தொடர்ந்தும் மோசமான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர் மீண்டும் கண் திறந்து தனது வைத்தியர்களுடன் உரையாடுவரா என்பது குறித்தும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**


அரபாத் கோமா நிலையில் இருந்து விடுபட்டுத் தன்னுடைய வைத்தியர்களுடன் உரையாடியுள்ளதாக ஸ்ரேல் ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன. இதனை அரபாத்தின் சிரேஷ்ட உதவியாளர் ஒருவர் மறுத்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த 24 மணித்தியாலயங்களில் அரபாத்தின் உடல் நிலை மேலும் மோசமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவர் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைக்கு வெளியே, அரபாத்தின் ஆதரவாளர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றியும், பலஸ்தீனக் கொடியை தாங்கியவாறும் அரபாத்தின் படங்களை ஏந்தியவாறும் தொடர்ந்தும் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன் இரவு முதல் அரபாத் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அரபாத் மரணமடைந்தால் பலஸ்தீனத்தின் அரசியல் கட்டுப்பாட்டுக்கான ஒரு பகுதி யுத்தம் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபாத் நிலை எவ்வாறாயினும் சரி பலஸ்தீனர்கள் சமாதானப் பேச்சுக்களை கைவிடக்கூடாது என்று வெளிநாட்டுத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜெருசலேத்தில் தான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதே அரபாத்தின் விருப்பமாகும், ஆனால் ஜெருசலேம் நகரம் யூதர்களின் மன்னர்கள் அடக்கம் செய்யப்பட்ட ஓர் நகரமாகும். இதில் அரபு பயங்கரவாதி ஒருவருக்கு இடம் கொடுக்கத் தயார் இல்லை என்று ஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இதனால் பலத்தீனர்கள் கொந்தளிப்படைந்துள்ளனர்.

ஸ்ரேல் அனுமதி அளிக்காத பட்சத்தில் அரபாத் காஸா பள்ளத்தாக்குப் பகுதியில் அடக்கம் செய்யப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## "சனிபாத்" தீவிரவாத தலைவர்களுக்கு எதிரான மீள் வழக்குவிசாரணை அமளிதுமளியில் நிறைவு

பெரு நாட்டில் 'சனிபாத்' தீவிரவாத இயக்கத் தலைவர்களுக்கு எதிரான மீள் வழக்கு விசாரணையின் முதல் அமர்வு அமளிதுமளியில் நிறைவடைந்துள்ளது.

சனிபாத் இயக்க ஸ்தாபகர் அபிமா[illegible] குஸ்மரிம் அவரது பதினைந்து சகாக்களும் இருக்கைகளை விட்டு எழு[illegible] நீதிமன்றில் கோசங்களை எழுப்பியதை அடுத்து நீதிபதி வழக்கு விசாரணையை இடைநிறுத்தினார்.

1980 இலும் 1990 இலும் இடம் பெற்ற கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாகவிருந்த 69 வயதுடைய அபிமாயு குஸ்மரிமுக்கு எதிராக பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. இதன்படி 1992 இல் இராணுவ நீதிமன்றத்தினரால் அவருக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனை 2003 ஆம் ஆண்டில் அரசியல் சாசன நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது. சனிபாத் இயக்கம் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தெரிவிலுள்ள கிராமப் புறங்களில் 1980 இல் கிளர்ச்சிகளை இது முடக்கி விட்டது.

பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் போது 70,000 பேர் கொல்லப்பட்டனர்.

## ஈராக்கில் சனநாயகம் திரும்ப வேண்டும் இந்திய அரசு விருப்பம்

போரால் சூழ்ந்துள்ள ஈராக்கில் சனநாயகம் விரைவில் திரும்பவேண்டுமென இந்தியா விரும்புகின்றது.

ஈராக்கில் தேர்தல்களை சுமுகமாகவும், நேர்மையாகவும் நடத்திட அந்நாட்டு தேர்தல் ஆணையாளர் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க புதுடில்லி உதவத் தயாராக இருக்கின்றதென பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புஷ்சிற்கு எழுதியுள்ள வாழ்த்துக் கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு 19 பொலிசார் உட்பட 37 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் சமாரா நகரில் நேற்றுக் காலை இடம் பெற்ற நான்கு தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 19 பொலிசார் உட்பட 37 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 62 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நான்காவது சம்பவத்தின் போது குண்டு நிரம்பிய கார் ஒன்றைப் பொலிஸ் நிலையத்திற்குள் செலுத்திச் சென்று தற்கொலைக் குண்டுதாரி அதனை வெடிக்க வைத்ததில் பத்துப் பொலிசார் கொல்லப்பட்டதோடு, மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். அதற்கு முன்னர் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈராக்கிய துரித அதிரடிப்படையின் துணைத்தளபதியும் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொரு சம்பவத்தில் வீதியோரத்தில் புதைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஈராக்கிய சாரதி ஒருவர் கொல்லப்பட்டதோடு இரண்டு ரக் வண்டிகளும் சேதமடைந்துள்ளன.

அமெரிக்கத் துருப்புக்களி[illegible] பாதுகாப்போடு சென்ற உண[illegible] பொருள் விநியோக மோ[illegible] அணி மீதே இந்தத் தாக்[illegible] நடத்தப்பட்டது குறிப்பிடத்[illegible]

## ஐவரிகோஸ்டில் விமானத்தாக்குதல் இரண்டு தீவிரவாதிகள் உட்பட 18 பேர் பலி

ஐவரிகோஸ்டின் வடபகுதி நகர் மீது அந் நாட்டின் விமானப் படை விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. இத் தாக்குதல் காரணமாக இரண்டு கிளர்ச்சிவாதிகள் உட்பட 18 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர் என ஐ.நாடுகள் சபை அறிவித்துள்ளது.

பிரான்ஸ் பாதுகாப்பமைச்சர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்:

அரச படையினருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையே இடம் பெற்று வரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஐ.நாடுகள் ஸ்தாபனம் அதன் அமைதிப்படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுள்ளார்.


பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயரும், பிரித்தானிய வெ[illegible] நாட்டுச் செயலாளர் ஜக்ஸ்ரோவும் மெய்ப்பாதுகாவலர் சூழ[illegible] ஐரோப்பிய மாநாட்டின் இரவு விருந்தினை முடித்துக்கொண்டு திரும்புகின்றனர்.

## பலூஜா நகர் மீதான தாக்குதல் திட்டத்திற்கு கொபி அனான் கண்டனம்; தலைவர்களுக்கும் கடிதம்

(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகர் மீது அமெரிக்க கூட்டுப் படைகளால் மேற்கொள்ளப்படவுள்ள தாக்குதல் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அமெரிக்க சனாதிபதி பிரிட்டிஷ் பிரதமர் மற்றும் ஈராக்கின் இடைக்கால நிர்வாக தலைவர் அலாவி ஆகியோருக்கு அனான் தனித்தனியாகத் தனது கண்டனத்தை வெளிப்படுத்தும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

மக்கள் செறிந்து வாழும் பகுதி மீது மேற்கொள்ளப்படவுள்ள இத் தாக்குதலானது பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தும் ஒன்றாக அமைவதுடன் ஈராக்கில் சனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தல் பாதிப்படையலாம் என சுட்டிக் காட்டியுள்ளார்.

பலூஜா நகர் மீது பாரிய தாக்குதலொன்றை மேற்கொள்ள அமொரிக்கக் கடற்படை இறுதித் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டிருப்பதாக சிரேஷ்ட அமெரிக்கத் தளபதி ஒருவர் நேற்று முன்தினம் ரொய்ட்டருக்குத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

## ஐ.நா.வின் எச்சரிக்கையையும் மீறி பலூஜாவில்அமெரிக்கபடை தாக்குதல்

ஈராக்கின் பலூஜா நகர் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் ஈராக் மற்றும் கூட்டணி அரசாங்கங்களை எச்சரித்துள்ள நிலையில் அந்நகர் மீது அமெரிக்கப் படையினர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஈராக்கில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அமைதி இன்றியமையாத நிலையில் படை பலபிரயோகமானது ஈராக்கைப் பலவீனப்படுத்தும் ஒன்றாக அமைந்துவிடும் என்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஈராக் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துருப்புக்கள் பலூஜா நகரில் உள்ள தீவிரவாதிகளின் சந்தேகத்திற்கிடமான தீவிரவாதிகளின் இலக்குகள் மீது கடும் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்த நகரின் மீதான தாக்குதல் தவிர்க்கப்பட முடியாது என்ற ஒரு கருத்தும் வலுப்பெற்றன. தீவிரவாதிகள் விடுமுறை நாளுக்கு வெளியே நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரும் தமது நிலைமைகளைப் பலப்படுத்தியிருந்தனர். அமெரிக்கா தலைமையிலான துருப்பினர் நகரை நோக்கியதும் வெளியே செல்வதுமான பாதைகளை மூடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதைகள் ஆயிரக்கணக்கான தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பவை என அமெரிக்கர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## கடத்தப்பட்ட மூன்று ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளையும் மீட்கும் முயற்சியில் ஐ.நாடுகள் அதிகாரிகள் முயற்சி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மூன்று ஐக்கிய நாடுகளின் பணியாளர்களை விடுவிப்பதற்காக தீவிரவாதிகளுக்கும; ஆப்கான் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

கடந்த மாதம் 28ஆம் திகதி காபூலில் வைத்துக் கடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் பணியாளர்களை விடுவிப்பதற்கான இந்தப் பேச்சுவார்த்தைகள் இரகசியமான இடம் ஒன்றில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பணயக் கைதிகள் மூவரையும் கொலை செய்யப் போவதாகக் கடத்தல்காரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## உகண்டாவில் துப்பாக்கிதாரர் தாக்குதல் நால்வர் பலி; ஆறுபேர் காயம்!

உகண்டாவில் பின் தங்கிய பகுதியொன்றில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் நடத்திய தாக்குதலொன்றில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன், ஆறு பேர் காயமடைநதுள்ளார்களென அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் பற்றிய வி[illegible]ரங்களை உடனடியாக அறிந்துகொள்ளவில்லையென்று தெரிவித்[illegible] இராணுவம் அந்தப் பகுதியில் கிளர்ச்சிவாதிகள் அதிகமாக நடமாடித் திரிவதாகக் கூறியுள்ளார்கள். இறந்தவர்களில் இராணுவவீரர் ஒருவரும், பொலிசார் ஒருவரும், மேலும் 2 சிவில் அதிகாரிகளும், அடங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# வன்னேரி-ஜெயபுரம் பிரதான வீதியில் பாலங்களால் போக்குவரத்து பாதிப்பு!

## வருடம் ஒன்றாகியும் வேலைகள் முடியவில்லை

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சியிலிருந்து வன்னேரிக்குளத்தின் ஊடாக ஜெயபுரம், முழங்காவில், மடு வரை செல்லும் பிரதான வீதியில் உள்ள பிரதான பாலம் ஒன்று ஒருவருடகாலமாக கட்டிமுடிக்கப்பெறாத நிலையில் காணப் படுகின்றது.**



பிரதான பாலத்தின் நிலை

அத்துடன் ஐந்துக்கு மேற்பட்ட சிறியபாலங்களை கட்டி முடித்தும் அதற்கு மேலுள்ள வீதி செப்பனி டப்படாது இருப்பதால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதான வீதியில் வன்னேரிக்குளத்திற்கும்,. ஜெயபுரத்திற்கும் இடைப்பட்டவீதியிலே பாலங்கள் இழுபறி நிலையில் உள்ளன. முதலாவதாக உள்ள பெரியபாலம் புதிதாக அமைப்பதற்காக உடைக்கப்பட்டு இன்று ஒருவருடத்தை நெருங்கியும் வேலைகள் முற்றுப்பெறும் நிலையைக்கூட நெருங்கவில்லை.

இதனால் இதற்கு அருகாக அமைக்கப்பட்ட தற்காலிக வீதியில் மழை அதிகமாகப்பெய்யும் வேளை நீர் மூடிப்பாய்கின்றது. இதனூடாக பயணிக்கும் வாகனங்கள், பேருந்துகள் என்பன பாரியஇடர்பாடுகளின் மத்தியிலேயே போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருகின்றன.

அத்தோடு இப்பிரதான பாலத்திற்கு அடுத்துள்ள ஐந்து சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்ட போதும் அதன் மேற்பகுதி வீதி மண்ணிடப்பட்டு செப்பனிடப்படவில்லை.

அதற்கு முன்வாகனப் பயணங்கள் மேற்கொள்ளப் பட்டதன் விளைவாக பாலத்தின் மேற்பகுதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.மேலும் இவ்வீதியில் ஒரு கோஸ்வே கட்டப்பட்டுள்ளது. அது கட்டிமுடிக்கப் பட்டு ஒருமாத காலத்தைத் தாண்டியும் அதனை பாவனைக்குத் திறந்துவிடாத நிலையில் மக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

எனவே இவ்வீதியில் உள்ள பிரதான பாலத்தை



கோஸ்வே அமைந்துள்ள பகுதி

மிக விரைவில் கட்டித்தரும் படியும் கட்டிமுடிக்கப் பட்ட ஏனைய சிறியபாலங்களின் மேல்உள்ள குன்றும் குழியுமாக காணப்படும் இடங்களைச் செப்பனிட்டுத் தருமாறும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றனர். (கு,தீ)

## கூட்டம் பிற்போடல்

வழக்கமாக இரண்டாவது செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும் அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம், தவிர்க்கமுடியாத காரணத்தினால் இம் மாதம் 2004.11.23 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

தயவு செய்து உறுப்பினர்கள் அனைவரும் தவறாதுகலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி, அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஏ—9 பிரதான வீதியோரம் மரக் கன்றுகள் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான விதியின் ஒரு மருங்கில் தமிழீழ வனவளப்பாதுகாப்பு பிரிவினர் மரக்கன்றுகளை நாட்டி வருகின்றனர்.

வனவளத்தைப் பேணிக்கொள்ளும்நோக்குடன் திட்டமிட்ட அடிப்படையில் கிளிநொச்சிநகர்ப்பகுதியில் முதல் கட்டமாக மரக் கன்றுகளை நாட்டி வருகின்றனர்.



இக்கன்றுகள் முதற் கட்டமாக கிளி/டிப்போ சந்தியிலிருந்து கரடிப் போக்கு சந்திவரை வீதியின் ஒரு பக்கத்தில் திட்டமிட்ட அளவுகளில் நாட்டப்பட்டுள்ளன. இக் கன்றுகளில் நகரப் பகுதியில் நாட்டப்பட்டவை பெரும்பாலனவை மலைவேம்புக்கன்றுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு,தீ)

# ஐயனார்புரம் அ.த.க பாடசாலையில் இரு மாடிக் கட்டடம் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஐயனார்புரம் அ.த.க.பாடசாலையில் நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடன் புதிய இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப் பாடசாலையானது இடம் பெயர்வு காலங்களில் அப்பகுதி மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் 2000 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப் பட்டு தரம் 09வரைஇயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 280 மாணவர்களை கொண்ட இப் பாடசாலையில் இரண்டு தற்காலிக கொட்டகைகள் மாத்திரமே உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இந்தப் புதிய கட்டடம் அமைக்கப் பட்டு வருகின்றது.

மேலும் இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் பாலானோர் கிளிநொச்சியில் இருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் வருகைதருவதால் பாடசாலைக்கு செல்லும் பிரதான வீதி கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் செல்லும்வரை மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் தமக்கு பெரும்சிரமம் ஏற்பட்டு வருவதாகவும் ஆசிரியர்கள் மிகவும் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (கு,தீ)

# வவுனியா ப.நோ.கூ.சங்கக் கட்டட இராணுவ முகாம் பலப்படுத்தப்படுகிறது

(மல்லாவி)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் ... க்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேலும் இராணுவ முகாமைப்பலப் படுத்தி வருகின்றனர்.

மேலதிகபதுங்குகுழிகளை அமைத்து வருகின்றனர். இதற்காக இரணை இலுப்பைக்குளம், கல்மடு பகுதிகளில் உள்ளகாட்டு மரங்களை அழிக்கின்றனர்.

காட்டுமரங்களைக் கொண்டு இராணுவ முகாம்பலப்படுத்துவதால் இயற்கை வளங்கள் அழிந்து வருவதையும் முகாம்பலப்படுத்துவதையிட்டு அக்கிராமமக்கள் கவலை அடைந்துள்ளனர். (24)

# சைவசமய துறவிகள் வரவேற்பும் நூல் வெளியீட்டு நிகழ்வும்

(அலுவலகசெய்தியாளர்)

சைவசமயத் துறவிகளின் வரவேற்பு ஊர்வலமும் "யோகர்சுவாமிகளும் கிளிநொச்சியும்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் எதிர் வரும் 19.11.2004ஆம் திகதி அன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் முதல் நிகழ்வாக நடுக்காட்டு மத்தியில் யோகர் சுவாமிகளின் வழிகாட்டலில் தனது குருதேவரான மகாதேவ ஆச்சிரமம் அமைத்து கரைச்சி, துணுக்காய்ப் பிரிவெங்கும் அரும் பணியாற்றி கிளிநொச்சி மண்ணிலே சமாதியடைந்த வடிவேற் சுவாமிகளது திருவுருவப் படத்தையும் அவர்களை நெறிப்படுத்திய யோகர்சுவாமிகளது திருவுருவப் படத்தையும் தாங்கிய ஊர்வலம் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலிருந்து 19.11.2004 காலை 9.30 இற்கு புறப்பட்டு பண்பாட்டு மண்டபத்தை வந்தடையும்.

பின்னர் அங்கு மண்டப நிகழ்வும் நூல்வெளியீட்டு விழாவும் இடம்பெறும். இந்நிகழ்வில் சைவ மக்கள் அனைவரும் அணிதிரண்டு வந்து சாதுக்களின் சந்நிதான மகிமையில் திளைத்து அவர்களது ஆசிபெற்று உய்யுமாறு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமமும், வன்னேரிக்குளம் யோகர்சுவாமிகள் முதியோர் இல்லத்தினரும் கேட்டுக் கொள்கின்றனர். (கு,தீ)

## புனர்வாழ்வுக் குழுக்கூட்டம்

வவுனியா மாவட்டசமூக அடிப் படையில் புனர்வாழ்வுக்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை 08.11.04 பிற்பகல் 4.00 மணிக்குவவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா அரச அதிபர் க.கணேஸ்தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்கள் உட்படபலர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)



வீதிவிபத்துக்களைத் தடுக்கும் வகையில் தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் வீதிவிதிமுறைகள் குறித்து அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் மத்தியில் கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். நேற்று முன்தினம் சேரன் வாணிப ஊழியர்களுக்கு மேற்படி கருத்துரையினைக் காவல்துறையினர் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்—சோதி)

# தேசிய எழுச்சிப் பேரவை சங்கமம்

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைக்கான சங்கமநிகழ்வு அண்மையில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச் சுடரை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் இலக்கியன் ஏற்றிவைக்க,தேசியக் கொடியை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் கதிர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து கருத்துரையினை ஒட்டுசுட்டான் மாங்குள கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் நிகழ்த்த, சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆற்றினார். இந்நிகழ்வில்

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளருக்கு பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தில் விவசாய பயிற்சி வகுப்பொன்று நடை பெற்றுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தில் கடந்த வியாழக் கிழமை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இந்தப் பயிற்சி வகுப்பு நடை பெற்றது. இப்பயிற்சி ... பாட்டு நிறுவன பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

வட்டக்கச்சி கமநலசேவை விவசாயப் போதனாசிரியர் பிரபாகரனால் நடாத்தப்பட்டபயிற்சி வகுப்பில் களை கட்டுப்படுத்துதல், நாற்று மேடைபராமரிப்பு, லிங்கமுறை, ஒட்டுமுறை, புதியமுறைகள் மூலம் தாவரங்களை இனப்பெருக்கம் செய்தல் பழமர நாற்றுக்கள் பரா ... குழிகாப்புத்தீன் தயாரித்தல் போன்ற விளக்கங்களை இப் பயிற்சி வகுப்பில் வழங்கினார்.

இதேபோன்று பயிற்சி வகுப் புக்கள் விவசாயிகள் மத்தியில் நடாத்தப்பட உள்ளதுடன் இதனூடாகப் புதிய விவசாய முறைகளையும், தங்கள்சந்தேகங் களையும் விவசாயிகள் தீர்த்துக்



கோணாவில் பகுதியிலிருந்து கிளிநொச்சி டிப்போ வீதியால் கிளிநொச்சி நோக்கி நேற்றுமுன்தினம் இரவு அதிவேகமாகச் சென்ற கன்டர் ரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வீதியைவிட்டு விலகி காணி ஒன்றினுள் உட்புகுந்து சேதமடைந்த நிலையில் உள்ள தனை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# யாழ்ப்பாணம் மாவட்ட மாவீரர் பெற்றோர் கவனத்திற்கு!

யாழ்.மாவட்டத் துயிலும் இல்லங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள துயிலும் இல்லங்களில் தங்கள் மாவீரச் செல்வங்களின் கல்லறைகள், நினைவுக்கற்கள் இருக்கும் யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது தேசத்தின் விடிவிற்காகக் களமாடி வீர காவியமாகி கல்லறைகளிலும், நடுகற்களிலும் உறங்கிக்கொண்டிருக்கும் எங்களின் பிள்ளைகள் எம் இனிய மாவீரர்களை நினைவு கூரும் நன்நாளாகிய 2004 ஆம் ஆண்டின் மாவீரர் நாள் எம்மை அண்மித்து விட்டது.

கார்த்திகை 27 எம் தேசத்தின் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் நினைவுச் சுடரேற்றுவதற்கு செல்லும் பெற்றோர்களுக்கான ஏற்பாடுகள் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே எம் பாசத்திற்குரிய மாவீரர்களின் பெற்றோர்களே தங்கள் மாவீரச் செல்வங்களின் கல்லறைகள், நினைவுக்கற்கள் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் துயிலும் இல்லங்களில் இருப்பின், எதிர்வரும் 20.11.2004 இற்கு முன்னர் தங்களுக்கு அருகில் உள்ள எமது பிரதேச அல்லது கோட்ட அரசியல் துறைச்செயலகங்களில் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

# சாவகச்சேரி நகர குப்பைகளை அகற்ற நகரசபையினர் மாற்று வழி தேடல்

## - படையினர் ஒத்துழைப்பின்மையே காரணம்

(வடமராட்சி)

**சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதியில் சேரும் குப்பை, கூழங்களை அகற்றும் பணிக்கு படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்காமையினால் மாற்று வழிகளைத் தேடவேண்டியதோர் நிலை ஏற்பட்டிருப்பதாக செயலாளர் திருமதிகு.ஆறுமுகம் குற்றஞ் சாட்டியுள்ளார்.**

குறிப்பாக நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் குப்பை, கூழங்களைக் கொட்டுவதற்கான இடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தனங்கிளப்பு வீதியின் கண்ணாடிப்பிட்டி மயானப்பகுதிக்கு நகரசபை பணியாளர்கள் செல்ல படைத்தரப்பு அனுமதி மறுத்து வருவதாலேயே இச்சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

இக் கரையோரப்பகுதிகளை பாதுகாப்பு வலயமாக படைத்தரப்பு பிரகடனப்படுத்தியுள்ளது. அத்துடன் பொது மக்கள் அப்பகுதியினுள் பிரவேசிக்கவும்அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை. குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது வரைகாலமும் நகரசபை எல்லைப்பகுதியினுள் சேரும் குப்பை கூழங்கள் தனியார் காணியொன்றினுள்ளேயே கொட்டப்பட்டு வந்திருந்தது. ஆயினும் குறித்த காணியின் உரிமையாளர் குப்பைகளைக் கொட்ட தற்போது அனுமதி மறுத்துவிட்டநிலையிலேயே சிக்கல்நிலை எழுந்துள்ளது. (27)

# பேருந்துகளில் பயணிகள் மழை ஒழுக்கினால் அவலம்!

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் பயன்பாட்டிலுள்ள அரச பேருந்துகளில் மழை ஒழுக்கினால் பயணிகள் நனைந்து பயணம் செய்யும் அவலநிலை தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டில் ஓடும் எண்பது சதவீதமான பேருந்துகளின் மேற்கூரைகள் மற்றும் கண்ணாடிகளில் ஏற்பட்டுள்ள விரிசல்களினால் மழை நீர் அப்படியே பேருந்துக்குள் வழிவதால் பயணிகள் இருக்கவும் முடியாமல் மழையினில் நனைந்துகொண்டும் பேருந்துக்குள்ளே குடைகளைப் பிடித்துக்கொண்டும் பயணம் செய்வதாகத் தெரியவருகிறது.

இந்த விசித்திரப் பயணம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டதற்கு யாழ்.குடாநாட்டில் செயலிழந்த பேருந்துகளே அதிகளவில் திருத்தம் செய்யப்பட்டு ஓடிவருவதாகவும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு பேருந்துகளின் எண்ணிக்கை போதாது எனவும் அவர் தெரிவித்தார். (28)

## -யாழ்.புங்குடுதீவுப்பகுதியில்-

# பாடசாலை அதிபர் வீட்டில் திருடப்பட்ட தாலிக்கொடி அரசியல் துறையினரால் மீட்பு

(நல்லூர்)

பாடசாலை அதிபர் வீட்டில் களவாடப்பட்ட தாலிக்கொடியினை யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறையினர் மீட்டெடுத்து உரியவர்களிடம் கையளித்துள்ளனர்.

புங்குடுதீவு பாடசாலையொன்றின் அதிபருடைய வீட்டின் கூரையின் ஊடாகச் சென்ற திருடன் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை திருடிச்சென்றுள்ளார்.

புங்குடுதீவில் இடம்பெற்ற இக்களவு சம்பந்தமாக யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறையினருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் அரசியல்துறையினர் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து களவாடியவர் இனம்காணப்பட்டு அவரிடம் இருந்து தாலிக்கொடிவிற்ற கடையின் விபரம் பெறப்பட்டு உரியவர்களுக்கு நகைமீளப் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (41)

# நீதிமன்றில் மீள் குடியமர்வை வலியுறுத்த தென்மராட்சி மக்கள் தீர்மானம்

(தென்மராட்சி)

எழுது மட்டுவாள் ஓட்டுவெளி, கரம்பகம், உசன் பகுதி மக்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமாக எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை என இப்பகுதி மக்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் பல போராட்டங்களை முன்னெடுத்தும் பல்வேறு அமைப்புக்களும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அரசின் பலதுறைஅதிகாரிகளுக்கும் தங்களது நிலைப்பாட்டை விளக்கியும் கூட போராட்டச் சூழ்நிலைகளின் போது படைத்தரப்பினராலும், அரச அதிகாரிகளினாலும், வெளிநாட்டு நிறுவனங்களினாலும் இப்பகுதி மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழிகளில் ஒன்றேனும் கூட நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்றும் உறுதி மொழிகளுக்கு மாறாய் தொடர்ந்தும் சிறிலங்காப் படைகள் படைமுகாம்களைப் பலப்படுத்திவருவதுடன் தமது உரிமைகளையும் தனிமனித சுதந்திரத்தையும் நசுக்கி வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்ற னர்.இப்பிரச்சினை சம்பந்தமாய் சிறிலங்கா நீதிமன்றத்தை நாடவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது.

# மாட்டுத் தொழுவமாக மாறும் கொடிகாமம் பேருந்து நிலையம்

(தென்மராட்சி)

மாடுகள் இரவு வேளைகளில் ஒதுங்கும் இடமாய் கொடிகாமம் பயணிகள் பேருந்து நிலையம் மாறியுள்ளது. இரவு வேளைகளில் கூட்டமாய் இப் பேருந்து நிலையத்துக்குள் படுக்கும் மாடுகள் அசிங்கப்படுத்தி வைப்பதுடன் பயணிகள் நிற்கமுடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் தெரியவருகிறது.ஏற்கனவே பேருந்து நிலையக்கூரை வானம்பார்க்கும் வகையில் இருப்பதால் மழைநீருடனும் சேறுடனும் சுகாதார சீர்கேட்டுடன் காட்சி தருகிறது.

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிந்தும் அறியாதவர்கள் போல் இருப்பதை விடுத்து உடனே செயலில் இறங்கி சீர்கேடுகளைச் சீராக்க முன்வரவேண்டும். (28)

# பொதுக்கிணறு அபகரிப்பு

(தென்மராட்சி)

புத்தூர்சந்தி வேம்புராய் சாலையில் உள்ள குடிநீர் பொதுக்கிணறு ஒன்று சிலரால் அபகரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களின் குடிநீர் தேவைக்கென உள்ள இரண்டு கிணறுகளில் ஒன்றே தற்பொழுது சிலரால் வேலிஅடைக்கப்பட்டு மறைக்கப்பட்டு உள்ளதால் இது குறித்து மக்கள் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.(28)

# வீதியின் நிலை மோசம்

(நல்லூர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்னால் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளமையால் பிரயாணிகள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டுள்ளனர். (41)

# ஒளிப்பேழை வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

பொலிகண்டி கந்தவன ஆலயத்தில் கடலோர அருளோசை ஒளிப்பேழை வெளியீட்டு விழா எதிர்வரும் பத்தாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட வியாபாரி மூலை இன்பர் சிட்டி பிள்ளையார் ஆலயம், பொலிகண்டி கந்தவன முருகன் ஆலயம், வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயம், வல்வெட்டித்துறை ஆதி வைரவர் ஆலயம், திருநாவலூர் மகமாரி அம்மன் ஆலயம், சுப்பர் மடம் முனீஸ்வரர் ஆலயம் ஆகிய ஆலயங்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. (45)

# குடாநாட்டில் அதிகரிக்கும் வீதிவிபத்துக்களை கட்டுப்படுத்த அரச அதிபர் தலைமையில் ஆராய்வு

## - ஏ-9 வீதியை அகலமாக்கவும் பரிந்துரை

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று யாழ்.அரச அதிபரால் நேற்று முன்தினம் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்திற்கு யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட சிறிலங்காவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயரத்தின உள்ளிட்ட உயர்பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரும் கலந்துகொண்டனர்.

யாழ்.நகரப்பகுதில் ஏற்பட்டுள்ள வாகன நெரிசல்களைக் கருத்திற் கொண்டு தனியார் பேருந்துகளிற்கான தரிப்பிடப் பகுதியினை முற்ற வெளிப் பிரதேசத்திற்கு மாற்றுதல் மற்றும் ஒரு வழிப்பாதையூடான போக்குவரத்து நடைமுறைகளைக் கவனமாகக் கடைப்பிடித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இக்கூட்டத்தினில் ஆராயப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் சேவையிலீடுபட்டிருக்கும் பெருமளவிலான தனியார் பேருந்துகள் உரிய பாதை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்கவில்லையென இக்கூட்டத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதையடுத்து மேற்படி பாதை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தமையினால் உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி பயணிகள் சேவையிலீடுபடும் தனியார் பேருந்துகள் அனைத்தினையும் பறிமுதல் செய்து நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டுமென ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை கடந்த சில வாரங்களாக யாழ்.கண்டி வீதியினில் இடம்பெற்றுவரும் வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆராயப்பட்ட வேளையில் குறித்த வீதியினை மேலும் அகலப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் உரிய திணைக்கள அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் யாழ்.நகரின் மத்திய பகுதியினில் பொதுமக்களினது பயன்பாட்டிற்கெனப் படைத்தரப்பால் தடைசெய்யப்பட்டுள்ள வீதிகளை மீளத்திறந்துவிட வேண்டுமென்ற கோரிக்கையும் இங்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனிடையே யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியினுள் வீதிவிபத்துக்களை மட்டுப்படுத்துவது தொடர்பாகவும், உரிய போக்குவரத்து நடைமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பாகவும் ஆராய மாநகர ஆணையாளர் தலைமையில் விசேட கூட்டமொன்று கூட்டப்படவுள்ளது. (27)

# எவருக்குமே பயனற்ற எண்ணெய்யும் தண்ணீரும் கூட்டு



**ஜே.வி.பிக்கும்** சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையே அண்மையில் மீண்டும் முரண்பாடுகளும் குழுப்பங்களும் அதிகரித்துள்ளமை வெளிப்படையாகியிருக்கிறது.

01.ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் ஜே.வி.பியின் திட்டம்

2. அளவு கணக்கின்றி அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் நியமனம்.

3.சனாதிபதி சந்திரிகா குறித்த விமல் வீரவன்சவின் உரை.

4 மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலாகாக்கள் அற்ற அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டமை.

என்பன அண்மையில் எழுந்துள்ள முரண்பாடுகளாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் சிலர் ஊழலில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி குற்றம்சாட்டுவதற்குப் பதிலாக ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்திற்கு ஜே.வி.பி சட்டத்திற்கு மாறான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்ட முதலாவது பிரச்சினை உருவாகியது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மூலம் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் 66 பேரில் 65 பேருக்கு அமைச்சர் பிரதியமைச்சர் பதவிகளை வழங்கியமை. இந்த விடயம் ஜே.வி.பி

**—வேலவன்—**

யைப் பொறுத்து அவமானகரமானதும், உணர்ச்சி கரமானதுமாகும். ஏனெனில் அளவு கணக்கற்ற அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக கடந்த காலங்களில் ஜே.வி.பி கடுமையாக விமர்சித்து வந்தது/கேலி செய்துவந்தது.

சிறிலங்காவின் 11வது பாராளுமன்றம் தனது ஒருவருடத்தைக் கூடப் பூர்த்தி செய்யாத நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நெருக்கடி நிலையைச் சந்தித்துநின்றது. அப்போது ஜே.வி.பி நன்நடத்தை அரசாங்கம் ஒன்றை அமைக்க பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கியது. அப்போது அது விதித்த முக்கிய நிபந்தனைகளில் ஒன்று அமைச்சரவையில் 25 பேருக்கு மேல் இடம்பெறக் கூடாதென்பதாகும். அப்போது சனாதிபதி சந்திரிகா 26 பேரை அமைச்சர்களாக நியமித்ததுடன் தன்னைவிட 25 பேர்தான் அமைச்சர்களாக உள்ளனர் என வாதம் புரிந்த போது ஜே.வி.பி இவ்விடயத்தில் கடும் போக்கிலேயே நின்றது.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவருக்கு எத்தனை அமைச்சர்களை நியமிப்பது குறித்தும் கூச்சமில்லை. அத்துடன் கூட்டுக் கட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும்போது பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தக்க வைத்துக்கொள்ளக் கூடிய ளவு அமைச்சர் பதவிகளை வழங்குவதே ஒரே வழி என்பது அவரது வாதமாகும்.

ஆனால் இம்முறையும் கூட ஜே.வி.பியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் கலந்தாலோசனை நடத்துவது எனக் குறிப்பிட்டபோதிலும் இறுதியாக நியமிக்கப்பட்ட மூன்று இலாகாக்கள்அற்ற அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் தமது ஆட்சேபனையை ஜே.வி.பி வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறது.

ஆனால் இவ்விடயத்தில் சந்திரிகா இவையெல்லாவற்றையும் செவிமடுப்பார் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் முன்னர் இருந்ததைவிட பலவீனமான எதிர்கட்சியிலிருந்து சிதறி வருவோரை அரவணைத்து ஆட்சி நடத்த வேண்டிய நிலையில் சனாதிபதி சந்திரிகா உள்ளார். அவரைப் பொறுத்து அவர் அறுதிப் பெரும்பான்மையுடன் கூட திருப்திப்படக் கூடிய நிலையில் இல்லை. அவரது எதிர்கால அரசியலை முடிவு செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கும் அவர் மூன்றிலிரண்டு பெரும்பான்மைவரை பாராளுமன்ற உறுப்பினர்களை வசப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது. அதற்காக அவர் எத்தனை அமைச்சர் பதவிகளையும் வழங்குவார். இவ்விடயத்தில் முறுகிக்கொள்வதைத் தவிர ஜே.வி.பிக்கு இப்பொழுது வழியில்லை.

அடுத்த விவகாரம் சனாதிபதி சந்திரிகா குறித்து ஜே.வி.பி பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆற்றிய உரையாகும்.

இந்த உரை வெளிப்படைக்கு கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சனாதிபதிக்கு இழைத்த கொடுமைகளை விபரிப்பது போலவே இருந்தது. சனாதிபதி நிறைவேற்று அதிகாரமுடையவராக இருந்தபோதும் அவர் ஐக்கிய தேசிய முன்னணியினரால் அவமானப்படுத்தப்பட்டவராக நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாதவராக, தினமும் பகிடிவதை போன்ற சித்திரவதையை அனுபவிப்பவர் போன்றவராக இருந்தார் என்பதே அதன் சாராம்சமாக இருந்தது. அத்துடன் அதிலிருந்து அவரை மீட்டெடுத்த பெருமை ஜே.வி.பியையே சாரும் என்பதாக இருந்தது.

இதனைத் தனியார் தொலைக்காட்சி ஒன்று மூன்று தினங்கள் தலைப்புச் செய்தியாக ஒளிபரப்பியது.

இந்த உரையைக் கவனித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஐ.தே.க விற்கு எதிராக அல்லாது ஜே.வி.பியினருக்குச் எதிராகவே வெகுண்டெழுந்தனர். ஏனெனில் அந்தச் செய்தியை அதாவது விமல் வீரவன்சவின் உரை அவ்வளவு தூரம் சனாதிபதி சந்திரிகாவை சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்திருந்ததே அதற்குக் காரணமாகும்.

இதேவேளை அமைச்சரவைத் தீர்மானங்களைத் தனது அனுமதியின்றி ஊடகங்களுக்கு வழங்கவோ அல்லது பொது மேடையில் பேசவோ கூடாது என சனாதிபதி சந்திரிகா இப்போது ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது ஜே.வி.பியையும் கட்டுப்படுத்தும். ஆகையில் ஜே.வி.பி கடைப்பிடிக்கும் அடிப்படைத் தந்திரோபாயத்திற்கு ஆபத்தாக இருக்கின்றது. அதாவது அரசாங்கத்தில் இருந்துகொண்டே பாதகமான மக்கள் எதிர்க்கும் விடயங்களை எதிர்ப்பது நல்ல விடயங்களுக்கான புகழைத் தாமே பெற்றுக்கொள்வது என்ற அதன் தந்திரோபாயத்திற்கு இவ்வுத்தரவு குந்தகமாகவுள்ளது.

எனினும் இந்த உத்தரவை எத்தனை நாட்களுக்கு ஜே.வி. ஏற்று நடக்கும் என்பது கேள்விக்குரிய விடயமாகும். ஏனெனில் உட்கட்சி விவகாரத்தை பேசித் தீர்த்துக்கொள்வோம். ஊடகங்களுக்குத் தெரிவிக்காதிருப்போம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னரும் பலமுறை கேட்டுக்கொண்டும் ஜே.வி.பி அதற்குச் செவிசாய்க்கவில்லை. அவ்வாறு கேட்டாலும் அது ஜே.வி.பி கே ஆபத்தாக முடியும்.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவதை நம்பி அவற்றை இரகசியமாக வைத்திருந்தால் பிரச்சினை ஒட்டுமொத்தமாக பூதாகரமாகி வெடித்து பிளவு ஏற்படுமானால் பழிமுழுவதையும் ஜே.வி.பி. மீது சுமத்த சந்திரிகா தயங்கமாட்டார்.

முரண்பாடான கொள்கையுடையவர்களின் சுயநலக் கூட்டுக்குள் இவ்வாறான இழுபறிகள், முரண்பாடுகள் தோன்றுவது அதிசயமானதொன்றல்ல. ஜே.வி.பி-சு.க கூட்டமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் எண்ணையுடன் தண்ணீரைக் கலந்துள்ளேன். என இந்தக் கூட்டை ஏற்படுத்திவிட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்ற அநுரா கூறியிருக்கிறார். அவர் அந்த விடயத்தை சரியாகக் கூறியிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் எண்ணையும், தண்ணியும் ஒரு போதும் கலக்கமாட்டாதவை, என்பதுடன் இக்கலவை எண்ணை தேவைப்படுவோருக்கு பயன்படாது.தண்ணீர் தேவைப்படுவோருக்கும் பயன்படாது.ஒட்டுமொத்தத்தில் எவருக்குமே பயன்படாத கூட்டே தற்போது சிறிலங்காவின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறது.

### —சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில்—

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 15 பெண்கள் கைதாகி பிணையில் விடுதலை

(வவுனியா செய்தியாளர்)

சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 15 பெண்கள் பொலிசாரின் உதவியுடன் மின்சார சபையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களைக் கண்டு பிடிப்பதற்காக வவுனியா மின்சார சபையினர் சென்றபோது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குடும்பங்களின் குடும்பத்தலைவர்கள் தலைமறைவாகியிருந்தனர். அப்போது குடும்பத்தலைவிகளை மின்சார சபைக்கு அழைத்துவந்த மின்சார சபையினர் பொலிசாருக்கு தகவல் கொடுத்து அவர்களைக் கைதுசெய்தனர்.

இதுதொடர்பாக குடும்ப உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு குடும்பத்தலைவிகளுக்கு கைக்குழந்தைகள் இருப்பதனால் அவர்களை உடனடியாகப் பிணையில் விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரினார். இதனைத் தொடர்ந்து அனைத்துப் பெண்களும் உடனடியாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (10)



வடிகாலமைப்பு சீரான முறையில் நிறுவப்படாமையால் மழை வெள்ளம் செல்ல முடியாத நிலையில் தேங்கி நிற்பதன் காரணமாக சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புக்கள் உருவாகியுள்ளது. கிளிநொச்சி ஏ-9 வீதியின் பொதுச்சந்தைக்கருகாமையில் மழைவெள்ளம் செல்லமுடியாத நிலையில் தேங்கி நிற்பதனைப் படத்தில் காணலாம். (படம்–சோதி)

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் கார்த்திகை -2004

நேற்றைய தொடர்....

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

490யா/ந/11930 திரு.கார்த்திகேசு வல்லிபுரநாதன்.
491யா/ந/11939 திரு.செல்லர் கலகலிங்கம்.
492யா/ந/11945 திரு.மாதன் தருமு.
493யா/ந/11949 திருமதி.நாகம்மா கனகசபை
494யா/ந/11950 திரு.கந்தையா தம்பித்துரை.
495யா/ந/11966 திருமதி.கமலேஸ்வரி சுப்பிரமணியம்.
496யா/ந/11976 திருமதி.திரவியம் இராமலிங்கம்.
497யா/ந/11977 திருமதி.சிவக்கொழுந்து நடராசா.
498யா/ந/11984 திருமதி.செல்வலட்சுமி துரையப்பா.
499யா/ந/12001 திரு.கனகரத்தினம் பரமானந்தம்.
500யா/ந/12013 திருமதி.கண்மணி மயில்வாகனம்
501யா/ந/12021 திருமதி.சின்னம்மா குமார்.
502யா/ந/12048 திருமதி.நாகரத்தினம் தம்பியப்பா.
503யா/ந/12070 திருமதி.மகேஸ்வரி சின்னத்துரை.
504யா/ந/12083 திருமதி.செல்வரத்தினம் முத்துமணி.
505யா/ந/12091 திரு.சின்னத்தம்பி நாகலிங்கம்.
506யா/ந/12101 திரு.கந்தன் கனகு.
507யா/ந/12111 திருமதி.நாகரட்ணம் யோகராசா.
508யா/ந/12122 திரு.துரையப்பா துரைரத்னம்.
509யா/ந/12148 திரு.பசுபதி நாகேஸ்வரன்.
510யா/ந/12215 திரு.மாணிக்கம் சுப்பிரமணியம்.

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

1யா/யா/28 திரு.சுப்பையா செல்லத்துரை.
2யா/யா/156 திரு.செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை இராசநாயகம்.
3யா/யா/182 திரு.அன்ரன் மச்சாடோ.
4யா/யா/188 திருமதி.பூமணி சண்முகம்.
5யா/யா/213 திரு.ஞானமுத்து அருளானந்தம்.
6யா/யா/226 திருமதி.தையல்நாயகி சின்னத்தம்பி.
7யா/யா/274 திருமதி.வியன் ராஜினி பிளாக்
8யா/யா/299 திருமதி.கனகலட்சுமி கணபதிப்பிள்ளை.
9யா/யா/338 திருமதி.மேரிமாகிறெற் யோசல்.
10யா/யா/371 திரு.அண்ணாமலை சிவலிங்கம்.
11யா/யா/386 திரு.வெல்ச்தர்மராஜ் குணசிங்கம்.
12யா/யா/401 திரு.கிருஸ்ணபிள்ளை நாகராசா.
13யா/யா/442 திரு.சரவனை மார்க்கண்டு.
14யா/யா/462திரு.வல்லிமுருகேஸ் பொன்னையா.
15யா/யா/466 திரு.செல்லப்பா சுப்பையா.
16யா/யா/517 திருமதி. பீஸ் பூரணம்பிள்ளை.
17யா/யா/558 திரு.தம்பிப்பிள்ளை பஞ்சாட்சரம்.
18யா/யா/562 திரு.முத்துத்தம்பி தியாகராசா
19யா/யா/592 திரு.சின்னத்தம்பி பாலசிங்கம்.
20யா/யா/660 திரு.கந்தையா அம்பலவாணர்.
21யா/யா/677 திருமதி.மகாலட்சுமி வேலாயுதபிள்ளை.
22யா/யா/689 திருமதி.இரத்தினாம்பிகை கனகரட்ணம்.
23யா/யா/693 திருமதி.கனகயோகம் குமாரகுலசிங்கம்.
24யா/யா/718 திரு.பூரணம் சுப்பிரமணியம்.
25யா/யா/724 திருமதி.இராசஇராஜேஸ்வரி சுப்பிரமணியம்.
26யா/யா/729 திருமதி.வன்மலாதேவி சுப்பிரமணியம்.
27யா/யா/746 திருமதி.ஞானாம்பிகை கந்தசாமி.
28யா/யா/803 திருமதி.அன்னப்பிள்ளை சிவசம்பு.
29யா/யா/820 செல்வி.சிதம்பரப்பிள்ளை பரமேஸ்வரி.
30யா/யா/826 திருமதி.தங்கமுத்து சின்னத்தம்பி.
31யா/யா/840 திரு.முருகேசு சிதம்பரப்பிள்ளை.
32யா/யா/842 திரு.பெரியதம்பி சபாரத்தினம்.
33யா/யா/900 திரு.வேலுப்பிள்ளை நல்லதம்பி.
34யா/யா/990 திருமதி.செல்வமணி சங்கரபாலசூரியர்.
35யா/யா/1011 திரு.நாகர் மாரிமுத்து.
36யா/யா/1022 திருமதி.அன்னம்மா கனகரத்தினம்.
37யா/யா/1028 திருமதி.பத்மசுந்தரி பிறெக்கன்றிட்ஜ்.
38யா/யா/1031 திரு.தம்பையா சபாரத்தினம்.
39யா/யா/1046 திரு. கபிரியற்பிள்ளை ஸ்பீன் மனுவேற்பிள்ளை.
40யா/யா/1084 திருமதி.விக்ரோறியா யோசேவ்.
41யா/யா/1086 திருமதி.அமிர்தாம்பிகை தங்கராசா.
42யா/யா/1107 திருமதி.யோகம்மா சதாசிவம்.
43யா/யா/1224 திரு.பாவிலுப்பிள்ளை யோசேப்.
44யா/யா/1281திரு.மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை.
45யா/யா/1300 திரு.வைத்திலிங்கம் கிருஷ்ணசாமி.
46யா/யா/1332 திருமதி.பேள் தேவசகாயம்.
47யா/யா/1336 திரு.பொன்னையா தியாகராசா.
48யா/யா/1372 திரு.சுப்பிரமணியம் சிவயோகம்.
49யா/யா/1387 திரு.சண்முகநாதன் தவநாதன்.
50யா/யா/1432 திரு.வேலுப்பிள்ளை பொன்னம்பலம்.
51யா/யா/1459 திரு.சண்முகம் மகாதேவா.
52யா/யா/1477 திரு.சின்னத்தம்பி இராசதுரை.
53யா/யா/1479 திரு.செல்லையா நாகேந்திரன்.
54யா/யா/1544 திரு.அப்பாவிச்செட்டியார் ரங்கசாமி.
55யா/யா/1556 திரு.விஜயரட்ணம் சுந்தரஇராமநாதர்.
56யா/யா/1579 திரு.கிருஸ்ணன் நடராசா.
57யா/யா/1589 திரு.சுப்பையா சிதம்பரப்பிள்ளை.
58யா/யா/1615 திருமதி.செல்லம்மா யோசப்.
59யா/யா/1619 திரு.கந்தையா தம்பிமுத்து.
60யா/யா/1706 திரு.துரையப்பா இராஜகோபால்.
61யா/யா/1749 திரு.மயிலு வீரசிங்கம்.
62யா/யா/1755 திருமதி.சிசிலியா றொட்றிக்கஸ்.
63யா/யா/1827 திருமதி.எலிசபெத் அந்தோனிப்பிள்ளை.
64யா/யா/1833 திரு.அன்ரனி செபஸ்ரியன் விக்ரோறியா.
65யா/யா/1865 திரு.வைத்திலிங்கம் பரராஜசிங்கம்.
66யா/யா/1867 திருமதி.பராசக்தி நகுலேசபிள்ளை.
67யா/யா/1939 திரு.செல்லையா பாலகிருஷ்ணன்.
68யா/யா/1946 திரு.ஜேக்கப் சூசைப்பிள்ளை அழகையா.
69யா/யா/1972 திரு.வேலுப்பிள்ளை சபாரெட்ணம்.
70யா/யா/2003 திரு.நாகமணி முத்துச்சாமி.
71யா/யா/ 2031 திரு.வல்தஸார் செபஸ்ரியன்துரைரெத்தினம்.
72யா/யா/2086 திரு.தம்பையா கந்தசாமி.
73யா/யா/2089 திருமதி.மாக்ரெட் சிமியோன்.
74யா/யா/2097 திரு.வேலுப்பிள்ளை நாகலிங்கம் கனகசபை.
75யா/யா/2104 திருமதி.மரியை விசுவாசமுத்து.
76யா/யா/2118 திரு.முத்துத்தம்பி ஜெயசிங்கம்.
77யா/யா/2126 திரு.சிவக்கொழுந்து சேனாதிராசா.
78யா/யா/2140 திரு.சின்னத்தம்பி ராஜதுரை.
79யா/யா/2148 திரு.பிறெட்றிக் பிரான்சிஸ் அன்ரனிப்பிள்ளை.
80யா/யா/2161 திருமதி.தர்மவதி கேதுசிகாமணி.
81யா/யா/2177 திரு.சவரிமுத்து ஆசீர்வாதம் போல்.
82யா/யா/2204 திருமதி.மாணிக்கம் சின்னத்தம்பி.
83யா/யா/2222 திரு.சின்னையா ஐயாத்துரை.
84யா/யா/2226 திருமதி.நவநீதம் சிவராசா.
85யா/யா/2258 திரு.சரவணமுத்து யோகராஜா.
86யா/யா/2311 திரு.ஞானப்பிரகாசம் பிறிற்றோ.
87யா/யா/2360 திரு.செபஸ்தியாம்பிள்ளை யேசையா.
88யா/யா/2380 திரு.அகஸ்ரின் சிங்கராயர்.
89யா/யா/2472 திரு.செல்லத்துரை ரெனிசன் றொபேட்.
90யா/யா/2524 திருமதி.திரேசம்மா அலெக்ஸாண்டர்
91யா/யா/2557 திரு.பொன்னம்பலம் நடராசா.
92யா/யா/2560 திருமதி.அன்னபூரணம் குமாரவேலு.
93யா/யா/2562 திருமதி.சின்னம்மா நடராசா.
94யா/யா/2602 திரு.சீமாம்பிள்ளை யோசேப்பு .இரத்தினம்.
95யா/யா/2608 திரு.பீற்றர் பசில் கொன்ஸ்ரன்ரைன்.
96யா/யா/2619 திரு.தம்பிப்பிள்ளை செல்லத்துரை.
97யா/யா/2664 திரு.தில்லையம்பலம் நடராசா.
98யா/யா/2706 திரு.குருசு பாவிலுப்பிள்ளை.
99யா/யா/2718 திருமதி.மேரியோசப்பின் பேரின்பரட்ணம்.
100யா/யா/2726 திரு.கதிரவேலு கந்தையா.
101யா/யா/ 2818 திரு.சின்னையா அரசரத்தினம்.
102யா/யா/2875 திரு.பேதுறுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை.
103யா/யா/2880 திரு.செல்லப்பா சங்கரப்பிள்ளை.
104யா/யா/2921 திரு.சின்னத்தம்பி பரமலிங்கம்
105யா/யா/2924 திரு.செல்லையா செல்வரெத்தினம்.
106யா/யா/2967 திரு.பிலிப் நீக்கலஸ்.
107யா/யா/3022 திரு.ஜோர்ஜ் அல்பேட் ஞானப்பிரகாசம்.
108யா/யா/3023 திருமதி.மேரிமாகிறட் சவரிமுத்து.
109யா/யா/3053 திருமதி.மேரிகெலன் குணசிங்கம்.
110யா/யா/3074 திரு.கபிரியேல் வெலிச்சோர்.
111யா/யா/3133 திரு.தீயோ றோமான்.
112யா/யா/3134திரு.தீயோ றோமான்.
113யா/யா/3137 திரு.அகஸ்ரீன் அருளப்பு.
114யா/யா/3191 திரு.வயிரவநாதர் செல்லத்துரை.
115யா/யா/3212திரு.வஸ்த்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை.
116யா/யா/3213 திருமதி.விக்றோறியா சவிரிமுத்து
117யா/யா/3233 திருமதி.லலிதா ஜெயபாலன்.
118யா/யா/3291 திரு.மனுவல்பிள்ளை லாசறஸ் அழகரெட்டினம்.
119யா/யா/3316 திரு.பிலிப் அருளானந்தம்.
120யா/யா/3350 திருமதி.அந்தோனியாப்பிள்ளை மத்தியாஸ்.
121யா/யா/3443 திரு.பேதுறு ஞானப்பிரகாசம்.
122யா/யா/3629 திரு.பாவிலுப்பிள்ளை அருளப்பு.
123யா/யா/3667 திரு.செல்வத்துரை பாலசிங்கம்.
124யா/யா/3685 திருமதி.மேரிஜோசப்பின் பேரின்பரட்ணம்.
125யா/யா/3710 திரு.சின்னர் கணபதிப்பிள்ளை.
126யா/யா/3713 திருமதி.ஈடித்கிருபைமலர் ஹென்ஸ்மன்.
127யா/யா/3732 திரு.நமசிவாயம் நடராசா
128யா/யா/3744 திரு.சீனித்தம்பி வேலுப்பிள்ளை.
129யா/யா/3790 திரு.தம்பையா ஆறுமுகம்.
130யா/யா/3820 திரு.இராமசாமி சின்னையா கந்தசாமி
131யா/யா/3837 திரு.நாகமுத்து நாகலிங்கம்.
132யா/யா/3853 திரு.ஆழ்வார் மாணிக்கம்.
133யா/யா/3861 திரு.தம்பையா சோமசுந்தரம்.
134யா/யா/3921 திரு.தம்பு தம்பையா.
135யா/யா/3933 திரு.தம்பிப்பிள்ளை சிவகுரு.
136யா/யா/3939 திருமதி.சுந்தரலெட்சுமி சுப்பிரமணியம்
137யா/யா/3957 திரு.வல்லிபுரம் கதிர்காமத்தம்பி.
138யா/யா/3982 திரு.சின்னப்பு பொன்னையா.
139யா/யா/4066 திருமதி.அருளாசியம்மா நேசராசா.
140யா/யா/4116 திருமதி.எலிசபெத் அன்னரத்தினம் வேலுப்பிள்ளை.
141யா/யா/4168 திரு.கந்தையாபிள்ளை இராமலிங்கம்.
142யா/யா/4192 திரு.திரவியம் அல்வீனப்பர்.
143யா/யா/4217 திரு.நாகலிங்கம் அருணாசலம்.
144யா/யா/4276 திரு.அந்தோனிப்பிள்ளை பெனடிக்ற் மரியாம்பிள்ளை.
145யா/யா/4279 திரு.அவுறாம்பிள்ளை யோசப்பு.
146யா/யா/4287 திருமதி.தங்கம்மா துரைராஜா.
147யா/யா/4331 திரு.றொகேஷன் யோசேப்பு.
148யா/யா/4376 திரு.வஸ்ரியாம்பிள்ளை யேசுநாயகம்.
149யா/யா/4390 செல்வி.நிடிஜா தம்பிராஜா.
150யா/யா/4432 திரு.கந்தையா ஜெகதலமுனி இராஜசிங்கம்
151யா/யா/4440 திரு.கந்தையா மயில்வாகனம்.
152யா/யா/4473 திரு.அப்பாக்குட்டி நல்லசேகரம்பிள்ளை
153யா/யா/4578 திரு.பறுனாந்து அந்தோணிப்பிள்ளை.
154யா/யா/4622 திருமதி.பாக்கியம் பரமசாமி.
155யா/யா/4636 திரு.மரியாம்பிள்ளை எட்வேட்.
156யா/யா/4670 திரு.சவிரிமுத்து மனவல்.
157யா/யா/4815 திருமதி.திரேசம்மா மனவல்.
158யா/யா/4843 திரு.வென்சமின் ஏபிரகாம்.
159யா/யா/4923 திரு.செபஸ்ரியாம்பிள்ளை எலியாஸ்.
160யா/யா/4934 திருமதி.மேரிதிரேசா சிமியோன்.
161யா/யா/4992 திரு.இராசையா அழகரட்ணம்.
162யா/யா/5055 திரு.இராசேந்திரம் இராசநாயகம்.
163யா/யா/5083 திரு.பிச்சை ராஜ்பெர்னாண்டோ.
164யா/யா/5120 செல்வி.தவமணி மார்க்கண்டு.
165யா/யா/5127 திரு.நாகநாதர் கந்தையா.
166யா/யா/5136 திரு.முருகர் செல்லத்துரை.
167யா/யா/5137 திரு.காசிப்பிள்ளை முத்தையா.
168யா/யா/5150 திருமதி.கமலாம்பிகை குமாரசாமி.
169யா/யா/5164 செல்வி.சிவபாக்கியம் சுந்தரம்.
170யா/யா/5167 திருமதி.ஆச்சிக்குட்டி முத்துவேலு
171யா/யா/5173 திரு.கந்தையா செல்வரெத்தினம்.
172யா/யா/5207 திரு.சின்னத்தம்பி முத்துத்தம்பி.
173யா/யா/5224 திருமதி.நாகம்மா வைத்திலிங்கம்.
174யா/யா/5233 திரு.இளையதம்பி செல்வராசா.
175யா/யா/5248 திருமதி.ஞானம்பாள் சிவசூரியர்.
176யா/யா/5259 திரு.யேம்ஸ் நேசராசா பிரான்சிஸ்.
177யா/யா/5260 திரு.செல்லையா தம்பியையா.
178யா/யா/5339 திரு.[illegible]ியேல் அந்தோனிப்பிள்ளை.
179யா/யா/5346 திரு.சி[illegible]ப்பொடி செல்லையா.
180யா/யா/5348 திரு.நீக்கி[illegible]ாப்பிள்ளை கொன்ஸ்ரன்ரைன்
181யா/யா/5363 திருமதி.[illegible]ியோசேப்பின் மகாலிங்கம்
182யா/யா/5364 திரு.சூசைமுத்து மனவல்.
183யா/யா/5381 திரு.வேலாயுதபிள்ளை பரமலிங்கம்.
184யா/யா/5392 திருமதி.மனேண்மணி நடராஜா.
185யா/யா/5401 திரு.தமியான் மத்தியூஸ்
186யா/யா/5404 திரு.பெனடிட்கிறகரி சந்தியாக்கோ.
187யா/யா/5496 திரு.ஜோசேப்பு தம்பிராஜா.
188யா/யா/5524 திரு.முத்தையா சண்முகநாதன்.
189யா/யா/5537 திருமதி.திரேசம்மா அருளானந்தம்.
190யா/யா/5541 திருமதி.பத்மாவதி இராசநாயகம்.
191யா/யா/5588 திருமதி.சின்னாச்சிப்பிள்ளை முருகேசு
192யா/யா/5595 திருமதி.ஞானப்பு யோசவ்வாஸ் அரசரத்தினம்
193யா/யா/5609 திருமதி.மனோன்மணி கந்தையா.
194யா/யா/5618 திரு.தம்பிப்பிள்ளை வேலாயுதபிள்ளை
195யா/யா/5633 திருமதி.செபஸ்தீயானா அத்தனாஸ்.
196யா/யா/5639 திருமதி.துரையம்மா வேலுப்பிள்ளை.
197யா/யா/5740 திருமதி.சோதிப்பிள்ளைசிவபாதசுந்தரம்
198யா/யா/5812 திருமதி.எலிசபெத் யோசப்.
199யா/யா/5818 திரு.தம்பு சிவானந்தன்.
200யா/யா/5820 திரு.வீரபத்திரர் கந்தையா.
201யா/யா/5840 திருமதி.அருந்ததி நாகலிங்கம்.
202யா/யா/5844 திருமதி.பத்மமலர் சண்முகலிங்கம்.
203யா/யா/5873 திருமதி.பஞ்சரத்தினம் குமாரசூரியர்.
204யா/யா/5917 திருமதி.பொன்னம்மா செல்லையா.
205யா/யா/5937 திரு.நாகமுத்து சண்முகம்.
206யா/யா/5955 திருமதி.யோசேப்பின் அம்புறோஸ்.
207யா/யா/5966 திருமதி.மேரிமாகிறேற் சின்னப்பு.
208யா/யா/6009 திரு.ஞானப்பிரகாசம் பஸ்ரீன் பேனாட்.
209யா/யா/6010 திருமதி.சிவபாக்கியம் கனகரட்ணம்.
210யா/யா/6018 திரு.வேலுப்பிள்ளை பொன்னையா.
211யா/யா/6021 திருமதி.கமலாட்சி செல்லையா.
212யா/யா/6022 திரு.ஆறுமுகம் கனகசபாபதி.
213யா/யா/6040 திரு.அன்ரனிப்பிள்ளை கஸ்மீர்யோசேப்
214யா/யா/ 6052திரு.முருகேசு சின்னத்தம்பி.


# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் கார்த்திகை -2004

215யா/யா/6060 திருமதி.தில்லைமுத்து மயில்வாகனம்.
216யா/யா/6073 திரு.எருப்பன் செட்டியார் சின்னப்பன் செட்டியார்.
217யா/யா/6165 திருமதி.மாகிறேற் சவரிமுத்து.
218யா/யா 6193 திரு.முத்துச்சாமி சுப்பையா.
219யா/யா/6205 திருமதி.கத்தரின் செல்லத்துரை.
220யா/யா/6247 திருமதி.மேரிப்பிள்ளை செபஸ்தியான்.
221யா/யா/6283 திரு.அல்பிரட் வைரமுத்து.
222யா/யா/6309 திருமதி.ஜெயசீலி தனபால்.
223யா/யா/6321 திரு.தம்பையா நடராசா.
224யா/யா/6323 திரு.செபமாலை அந்தோணிப்பிள்ளை.
225யா/யா/6346 திரு.சூசைமாணிக்கம் பெர்னான்டோ.
226யா/யா/6361 திருமதி.மகேஸ்வரி பொன்னம்பலம்.
227யா/யா/6401 திருமதி.இரத்தினம் சுப்பிரமணியம்.
228யா/யா/6416 திரு.கபிரியேல் அருளப்பு.
229யா/யா/6459 திரு.ஜேம்ஸ் பஸ்த்தியாம்பிள்ளை.
230யா/யா/6475 திரு.மனவள் அந்தோனிப்பிள்ளை.
231யா/யா/6486 திருமதி.சிவபாக்கியம் முத்தையா.
232யா/யா/6500 திரு.திரவியம் கஷ்மீர்.
233யா/யா/6507 திரு.கந்தையா சீவரட்ணம்.
234யா/யா/6553 திரு.கயிலாயம்செட்டியார் முத்துக்குமாரசாமி.
235யா/யா/6584திருமதிமில்ராட் ரெட்ணராணி அலெக்ஸ் சாண்டர்.

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

1யா/கோ/18 திரு.கந்தையா கணேஸ்ஜயா.
2யா/கோ/60 திரு.நாகமுத்து நடராசா.
3யா/கோ/72 திரு.சின்னத்தம்பி பொன்னுத்துரை.
4யா/கோ/107 திரு.தம்பிமுத்து சரவணமுத்து.
5யா/கோ/131 திருமதி.செல்லம் சின்னத்துரை.
6யா/கோ/247 திரு.சண்முகம் குமாரசுவாமி.
7யா/கோ/271 திரு.பொன்னம்பலம் செல்வரத்தினம்.
8யா/கோ/296 செல்வி.திருஞானசோதி அருளம்பலம்.
9யா/கோ/297 திரு.கந்தப்பு இராசதுரை.
10யா/கோ/321 திரு.சின்னத்தம்பி வைத்திலிங்கம்பிள்ளை
11யா/கோ/499 திரு.முத்தையா தணிகாசலம்.
12யா/கோ/638 திரு.கதிரன் கந்தையா.
13யா/கோ/676 திரு.நல்லான் மார்க்கண்டு.
14யா/கோ/699 திரு.கிருஷ்ணர் நாகலிங்கம்.
15யா/கோ/709 திரு.சூரன் பண்டாரம்.
16யா/கோ/741 திரு.சின்னப்பொடி இரத்தினசுவாமி.
17யா/கோ/772 திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்.
18யா/கோ/796 திரு.குட்டித்தம்பி சிங்கை ஆரியரத்தினம்
19யா/கோ/933 திருமதி. நல்லம்மா சதாசிவம்.
20யா/கோ/938 திரு.சின்னத்தம்பி பாலன்.
21யா/கோ/939 திரு.நாகமுத்து பொன்னையா.
22யா/கோ/1003 திரு.கந்தையா செல்லத்துரை.
23யா/கோ/1019 திரு.கணபதிப்பிள்ளை தம்பையா.
24யா/கோ/1023 திரு.சிற்றம்பலம் தம்புச்சாமி.
25யா/கோ/1032 திரு.கார்த்திகேசு விசுவலிங்கம்.
26யா/கோ/1035 திரு.கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை.
27யா/கோ/1038 திரு.சின்னையா இராசநாயகம்.
28யா/கோ/1041 திரு.வட்டன் வயிரவன்.
29யா/கோ/1047 திரு.சண்முகம்பிள்ளைபாலசுப்பிரமணியம்.
30யா/கோ/1057 திரு.கதிர்காமத்தம்பி சிவசம்பு.
31யா/கோ/1072 திரு.வேலுப்பிள்ளை சிற்சபேசன்.
32யா/கோ/1073 திருமதி.தங்கரத்தினம் இராசையா.
33யா/கோ/1088 திரு.முருகேசு பொன்னையா.
34யா/கோ/1144 திரு.யோன் யோசேப்.
35யா/கோ/152 திரு.கந்தையா கோவிந்தபிள்ளை.
36யா/கோ/1163திரு.சபாபதி கணேசு.
37யா/கோ/1174 திரு.அப்பாத்துரை கணேசு.
38யா/கோ/1200 திரு.சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி.
39யா/கோ/1208 திரு.சின்னக்குட்டி முத்துத்தம்பி.
40யா/கோ/1214 திருமதி.முத்தாச்சி கனகரத்தினம்.
41யா/கோ/1286 திருமதி.பருவதம் கந்தையா.
42யா/கோ/1304 திரு.சிவகுரு இராசையா.
43யா/கோ/1305 திரு.இளையதம்பி காசிப்பிள்ளை.
44யா/கோ/1330 திரு.செல்லப்பா செல்லத்துரை.
45யா/கோ/1340 திரு.சேனாதிராசா சோமசுந்தரம்.
46யா/கோ/1365 திரு.வேலன் சீனிவாசகம்.
47யா/கோ/1391 திரு.இளையதம்பி சரவணமுத்து.
48யா/கோ/1400 திரு.இராமு சின்னத்துரை.
49யா/கோ/1401 திரு.சின்னப்பா செல்லத்துரை.
50யா/கோ/1402திரு.சாமுவேல் வேலுப்பிள்ளை செபரத்தினம்.
51யா/கோ/1416 திரு.வயிரமுத்து சற்குணசிங்கம்.
52யா/கோ/1449 திருமதி.தயாளம் இரத்தினாதிக்கம்.
53யா/கோ/1505 திரு.பொன்னையா கந்தையா.
54யா/கோ/1510 திரு.அப்பாப்பிள்ளை கந்தையா.
55யா/கோ/1528 திருமதி.லட்சுமி தயானந்தம்.
56யா/கோ/1562 திரு.தம்பையா இராசேந்திரம்.
57யா/கோ/1598 திரு.இராமு சின்னத்தம்பி.
58யா/கோ/1603 திரு.வேலுப்பிள்ளை செல்லத்துரை.
59யா/கோ/1644 திரு.மாப்பாணர் தம்பாபிள்ளை.
60யா/கோ/1657 திருமதி.அன்னபூரணம் முருகேசு.
61யா/கோ/1675 திரு.நமசிவாயம் குழந்தைவேலு.
62யா/கோ/1700 திரு.கதிரவேலு நடராசா.
63யா/கோ/1706திரு.முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள்.
64யா/கோ/1724 திரு.கார்த்திகேசு இரத்தினம்.
65யா/கோ/1739 திரு.சதாசிவம் சிவக்கொழுந்து.
66யா/கோ/1743 திரு.பொன்னையா சின்னப்பு.
67யா/கோ/1750 திருமதி.சின்னப்பிள்ளை வேதவனம்.
68யா/கோ/1760 திரு.சின்னையா செல்லத்துரை.
69யா/கோ/1786 திரு.சிவக்கொழுந்து வயித்திலிங்கம்.
70யா/கோ/1803 திரு.சின்னப்பு கந்தையா.
71யா/கோ/1820 திரு.சின்னப்பு கந்தையா
72யா/கோ/1827 திரு.பெரியதம்பி கணேசலிங்கம்.
73யா/கோ/1848திரு.இராசமுத்து மயில்வாகனம்.
74யா/கோ/1871திரு.விசுவநாதர் பொன்னையா.
75யா/கோ/1905 திரு.ஜயன் செல்லப்பா
76யா/கோ/1924 திரு.குமாரு செல்லையா.
77யா/கோ/1930 திருமதி.சிவசாமிப்பிள்ளை மாரிமுத்து.
78யா/கோ/1934 திரு.செல்லையா சுப்பிரமணியம்
79யா/கோ/1985 திரு.பொன்னர் அப்புத்துரை.
80யா/கோ/1990 திருமதி.அரியம்மா செல்லத்துரை.
81யா/கோ/1991திரு.சரவணை பாலசுப்பிரமணியம்.
82யா/கோ/2093 திருமதி.புவனேஸ்வரி கணேசலிங்கம்.
83யா/கோ/2104 திரு.வல்லிபுரம் இராசையா.
84யா/கோ/2129 திரு.சுப்பிரமணியம் தசரதன்.
85யா/கோ/2153 திரு.சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை.
86யா/கோ/2246 திரு.வேலுப்பிள்ளை கந்தவனம்.
87யா/கோ/2311திரு.சின்னவன் ஆண்டி.
88யா/கோ/2328 திரு.கதிரன் கந்தையா.
89யா/கோ/2341 திரு.கதிரவேலு நடராசா.
90யா/கோ/2344 திரு.கதிரன் நாகமுத்து.
91யா/கோ/2376 திரு.கதிரன் சீனியன்.
92யா/கோ/2411 திரு.முருகேசு மாணிக்கம்.
93யா/கோ/2418 திரு.சிதம்பரம் பொன்னன்.
94யா/கோ/2504 திரு.தில்லையர் சுந்தரம்.
95யா/கோ/2552 திரு.கதிர்காமு வேலுப்பிள்ளை.
96யா/கோ/2558 திரு.வயிரமுத்து மயில்வாகனம்.
97யா/கோ/2575 திரு.காசி ஆசைப்பிள்ளை.
98யா/கோ/2576 திரு.செல்லத்துரை பாலசிங்கம்.
99யா/கோ/2651 திருமதி.அழகரத்தினம் முருகேசு.
100யா/கோ/2659 திரு.இராமு மார்க்கண்டு.
101யா/கோ/2679 திரு.நாகலிங்கம் நடராசா.
102யா/கோ/2744 திருமதி.சின்னத்தம்பி சாம்பசிவம்.
103யா/கோ/2752 திரு.சின்னட்டி சுந்தரம்.
104யா/கோ/2805 திரு.வேலுப்பிள்ளை செல்லத்தம்பி.
105யா/கோ/2826 திரு.பொன்னம்பலம் சின்னத்துரை.
106யா/கோ/2832 திரு.பரமு தேவராசா.
107யா/கோ/2863 திருமதி.தெய்வானைப்பிள்ளை நடராசா.
108யா/கோ/2865 திரு.நாகமுத்து தம்பிராசா.
109யா/கோ/2974திருமதி.சிவகாமிப்பிள்ளை தியாகராசா.
110யா/கோ/2979 திரு.அருணாசலம் சிவானந்தன்.
111யா/கோ/3017 திரு.வேலுப்பிள்ளை தம்பிராஜா.
112யா/கோ/3109 திருமதி.மகேஸ்வரி வெற்றிவேலு.
113யா/கோ/3163 திருமதி.புவனேஸ்வரி கனகரத்தினம்.
114யா/கோ/3207 திரு.கார்த்திகேசு சிற்றம்பலம்.
115யா/கோ/3239 திரு.கந்தையா சுப்பிரமணியம்.
116யா/கோ/3249 திருமதி.சிதம்பரேஸ்வரி குமாரசாமி.
117யா/கோ/3257 திரு.கந்தையா சிவஞானம்.
118யா/கோ/3263 திரு.முத்தையா சுந்தரம்.
119யா/கோ/3283 திரு.சுந்தரம் தர்மலிங்கம்.
120யா/கோ/3303 திரு.கார்த்திகேசு வல்லிபுரம்.
121யா/கோ/3307 திருமதி.விஜயலட்சுமி சிவசங்கரநாதன்.
122யா/கோ/3331 திரு.சிவஞானம் கனகரத்தினம்.
123யா/கோ/3334 திரு.சின்னத்தம்பி கந்தையா.
124யா/கோ/3338 திரு.சின்னவன் குட்டியன்.
125யா/கோ/3371திரு.அப்புக்குட்டி நல்லதம்பி.
126யா/கோ/3413 திரு.வேலுப்பிள்ளை சுந்தரம்.
127யா/கோ/3428 திரு.செல்லப்பா சிவசுப்பிரமணியம்.
128யா/கோ/3435 திரு.தம்பையா செல்லத்துரை.
129யா/கோ/3495 திருமதி.தங்கரத்தினம் வெற்றிவேலு.
130யா/கோ/3525 திரு.செல்லையா கணேசசாமி.
131யா/கோ/3593 திரு.செல்லப்பா நடராஜா.
132யா/கோ/3597 திரு.இராமலிங்கம் நடராசா.
133யா/கோ/3599 திரு.சம்பந்தர் நாகலிங்கம்.
134யா/கோ/3600 திரு.இளையதம்பி நடராசா.
135யா/கோ/3606 திருமதி.பாக்கியலக்சுமி பாலசிங்கம்.
136யா/கோ/3612 திரு.வேலுப்பிள்ளை பரமநாதன்.
137யா/கோ/ 3626 திருமதி.இரத்தினேஸ்வரி இராசரட்ணம்.
138யா/கோ/3647 திரு.தம்பையா சுந்தரலிங்கம்.
139யா/கோ/3693 திரு.இராயேந்திரா தம்போல்.
140யா/கோ/3836 திருமதி.மேரிஜோசபின்ராணி நீக்கிலாஸ்
141யா/கோ/3873 திருமதி.பூரணம்மா சரவணமுத்து.
142யா/கோ/3914 திரு.பொன்னம்பலம் சண்முகதாசன்.
143யா/கோ/3958திரு.இளையதம்பி சின்னத்தம்பி.
144யா/கோ/4007 திரு.குட்டியர் வேலுப்பிள்ளை.
145யா/கோ/4041 திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை.
146யா/கோ/ 4061திரு.நாகமுத்து நல்லையா.
147யா/கோ/4074 திரு.கந்தையா இராமசாமி.
148யா/கோ/ 4085 திரு.கந்தையா சின்னத்தம்பி.
149யா/கோ/4098 திரு.இராமலிங்கம் செல்லத்தம்பி.
150யா/கோ/4122 திரு.இளையதம்பி வேலுப்பிள்ளை
151யா/கோ/4132 திரு.சின்னையா ஆறுமுகம்.
152யா/கோ/4169 திரு.கணபதிப்பிள்ளை கதிர்காமு.
153யா/கோ/4170 திரு.இளையதம்பி கணபதிப்பிள்ளை.
154யா/கோ/4176 திருமதி.குழந்தையார் கைலாயபிள்ளை
155யா/கோ/4248 திரு.முருகேசு பெரியதம்பி.
156யா/கோ/4299திரு.வைத்திலிங்கம் சுப்பிரமணியம்.
157யா/கோ/4304 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியயம்.
158யா/கோ/4321 திரு.செல்லத்துரை சிவலிங்கம்.
159யா/கோ/4357 திருமதி.வள்ளிப்பிள்ளை வீரசிங்கம்.
160யா/கோ/4404 திரு.பாலர் பொன்னம்பலம்.
161யா/கோ/4411 திரு.மயில்வாகனம் இராசரத்தினம்.
162யா/கோ/4429 திரு.கணபதிப்பிள்ளை சரவணமுத்து
163யா/கோ/4460 திரு.ஆறுமுகம் தாணையா.
164யா/கோ/4475 திரு.விஸ்வலிங்கம் அம்பலவாணர்.
165யா/கோ/4484 திரு.கணபதி கந்தையா.
166யா/கோ/4491 திரு.குட்டியன் மாணிக்கம்.
167யா/கோ/4499 திரு.சிவகுருநாதன் இராஜதுரை.
168யா/கோ/4507 திரு.செல்லத்துரை சண்முகநாதன்.
169யா/கோ/4523 திரு.வைரவன் செல்லத்துரை.
170யா/கோ/4570 திரு.சுந்தரம்பிள்ளை சபாநயகம்.
171யா/கோ/4607 திரு.இளையதம்பி தம்பு.
172யா/கோ/4613 திரு.தங்கராஜா கஜமுகன்.
173யா/கோ/4633 திரு.கார்த்திகேசு குமரேசு.
174யா/கோ/4643 திரு.மயில்வாகனம் கந்தையா.
175யா/கோ/4787 திரு.வெள்ளையன் சங்கரப்பிள்ளை.
176யா/கோ/4837 திரு.கதிரவேலு சபாபதி.
177யா/கோ/4868 திரு.கனகசபை வேலுப்பிள்ளை.
178யா/கோ/4876 திரு.பூதத்தம்பி வீரசிங்கம்.
179யா/கோ/4886 திருமதி.முத்தம்மா கணபதி.
180யா/கோ/4888 செல்வி.விஜயலட்சுமி சிவகுரு.
181யா/கோ/4906திரு.நல்லதம்பி கதிரமலை செல்லத்துரை
182யா/கோ/4929 திரு.அரியகுட்டி அருளானந்தன்.
183யா/கோ/4946 திரு.கந்தையா சபாரெத்தினம்.
184யா/கோ/4951 திரு.அழகர் தாயுமானவர்.
185யா/கோ/4985 திரு.பண்டாரி கிட்டினர்.
186யா/கோ/4996 திருமதி.குணமணி தர்மலிங்கம்.
187யா/கோ/5005 திரு.சுப்பர் நாகலிங்கம்.
188யா/கோ/5021 திரு.செல்லையா தில்லைநாதன்.
189யா/கோ/5031 திரு.முத்து மாணிக்கமுத்து மயில்வாகனம்
190யா/கோ/5047 திருமதி.தங்கம்மா ஆறுமுகம்.
191யா/கோ/5178 திரு.கனகசபை இரத்தினசபாபதி.
192யா/கோ/5207 திரு.நாகமுத்து சின்னத்துரை.
193யா/கோ/5222 திருமதி.சோதிரத்தினம் பொன்னுத்துரை
194யா/கோ/5247 திருமதி.தவமணி சுப்பையா.
195யா/கோ/5300 திரு.சின்னத்துரை ஆனந்தகுமாரசாமி
196யா/கோ/5330 திரு.ஐயம்பிள்ளை கந்தையா.
197யா/கோ/5331 திரு. கந்தையா கதிரவேலு.
198யா/கோ/5365 திரு.கோவிந்தபிள்ளை நடராசா.
199யா/கோ/5366திரு.கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்.
200யா/கோ/5381 திரு.சுப்பிரமணியம் பொன்னையா.
201யா/கோ/5404 திரு.தம்புறிச்சேட் செல்வரத்தினம்.
202யா/கோ/5441 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
203யா/கோ/5450 திரு.சுப்பிரமணியம் சின்னத்தமபி.
204யா/கோ/5516 திரு.நாகலிங்கம் கனகலிங்கம்.
205யா/கோ/5521 திரு.கணபதிப்பிள்ளை முத்துத்தம்பி.
206யா/கோ/5547 திருமதி.பூரணம் சீனி.
207யா/கோ/5569 திரு.அழகரத்தினம் இரத்தினசிங்கம்.
208யா/கோ/5585 திருமதி.சிவபாக்கியம் சுப்பையா.
209யா/கோ/5591 திருமதி.சின்னம்மா நல்லையா.
210யா/கோ/5594 திருமதி. சவுந்தரம் இராமலிங்கம்.
211யா/கோ/ 5612திரு. ஆறுமுகம் சோமசுந்தரம்.
212யா/கோ/ 5617திரு. திருநாவுக்கரசு சிவராசா.
213யா/கோ/ 5619திரு.தில்லையம்பலம்தாமோதரம்பிள்ளை
214யா/கோ/5620திரு. கந்தையா தில்லையம்பலம்.
215யா/கோ/ 5635திரு. கார்த்திகேசு தாமோதரம்பிள்ளை
216யா/கோ/5715திரு. ஞானப்பிரகாசம் விசுவாசம்.
217யா/கோ/ 5759திருமதி. கனகம்மா இரத்தினம்.

தொடரும்....



# இந்தியா- சிறிலங்கா உறவு

# ஜே.ஆர் வழியில் சந்திரிகா!

“நாங்களும்-சிறிலங்கா இராணுவமும்-விடுதலைப்புலிகளும் விளையாடிய போது இந்தியா மத்தியஸ்துவம் வகித்தது. தற்பொழுது இந்தியாவும் -விடுதலைப் புலிகளும் விளையாடும்போது நாங்கள் மத்தியஸ்தம் செய்கின்றோம் எனத் தனது இராஜதந்திரம் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டார் முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன.

1987இல் இந்திய இராணுவத்திற்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டபோதே இவ்வாறு அவர் பெருமைப்பட்டுக்கொண்டார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இவ்வாறு பெருமைப்பட்டுக் கொண்டமை ஒருவகையில் சரியானதே. தமது காவலர்களாக இலங்கைத்தமிழ் மக்கள் இந்தியாவைக் கருதியிருந்த வேளையில் இந்தியாவைக் கொண்டே ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டதை ஆயுதரீதியில் ஒடுக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜே.ஆரின் இராஜதந்திரம் இந்த விடயத்தில் மெச்சத்தக்கதொன்றே.

ஆனால், ஜே.ஆர்.எதிர்பார்த்த மாதிரி தமிழீழ விடுதலைப்போராட்டத்தை ஆயுத முனையில் நசுக்க முடியாமல் போனமையும், பதட்டமானதொரு அரசியற்சூழ்நிலையில் தனது எதிர்கால அரசியற்கனவுகள் நிறைவேறாமலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவி துறக்க வேண்டிவந்தமையும் வேறு விடயங்கள் ஆகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் இராஜதந்திரமும், அணுகுமுறையும் குறித்துத் தற்பொழுது பிரஸ்தாபிக்கப்பட வேண்டிவந்துள்ளமைக்கு தற்போதைய சனாதிபதி சந்திரிகாவும் இந்தியா தொடர்பாக இத்தகையதொரு அணுகுமுறையையே கைக்கொள்ள விரும்புகின்றமை போல் உள்ளமையே காரணமாகும்.

இதனைச் சுருக்கமாகக் கூறுவதால் இனப்பிரச்சினை விவகாரத்தை இந்தியாவுடன் நேரடித் தொடர்புபட்டதாக/ சம்பந்தப்பட்டதாக மாற்றிவிடுவதன் மூலம் இந்தியாவிற்கும், தமிழருக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீவிரமாக்குவதும், இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீட்டைக் கொண்டு வரும் அளவிற்கு சூழ்நிலையை மாற்றியமைத்தலுமே சனாதிபதி சந்திரிகாவின் திட்டமாகவுள்ளது என்பதாகும்.

ஏற்கனவே திருமலைத்துறைமுகத்தில் உள்ள எரிபொருள் தாங்கிகளை இந்தியாவிற்குக் குத்தகைக்குக் கொடுத்ததன் மூலம் வடக்கு-கிழக்கு விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டிற்கு சிறிலங்கா அரசாங்கம் வழிசமைத்துக்கொடுத்தது. அண்மைய வருடங்களில் திருமலைத்துறைமுகத்தில் பாதுகாப்புத் தொடர்பாக சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் அடிக்கடி பிரஸ்தாபிப்பதற்கு இந்தியாவின் கவனத்தைக் கவருவதும் நோக்கமாகும்.

அதாவது திருமலைத் துறைமுகத்தில் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பது-அங்குள்ள எண்ணெய்க் குதங்களுக்கும் ஆபத்து என்ற ரீதியில் இந்தியாவை விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியிலான செயற்பாட்டிற்கு முனைப்புப் படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இதனை ஒத்ததாகவே தற்பொழுது சனாதிபதி சந்திரிகாவின் ஏனைய நடவடிக்கைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக தற்போதைய சூழ்நிலையில் சிறிலங்கா இந்தியா தொடர்பாகச் சனாதிபதி சந்திரிகா இந்தியத்தலைவர்களுடன் பிரஸ்தாபிக்கும் பல்வேறு விடயங்களும் இத்தகையதன்மை பொருந்தியவையே. இவற்றில் சேதுக்கால்வாய்த் திட்டம், இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினைகள், பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் இலங்கையில் இந்தியப் பொருளாதாரத்தின் பாதுகாப்பு போன்ற அனைத்துமே தமிழ் மக்களுடன் தொடர்புடைய பிரச்சினையே.

இந்தியா மத்திய அரசினால் நிறைவேற்றப்படவுள்ள சேதுக்கால்வாய்த் திட்டமானது இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையில் இந்தியக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ள கப்பல் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் கடலை ஆழமாக்கும் இத் திட்டமானது நேரடியாக இலங்கையின்-குறிப்பாக வடபகுதியின் பௌதிகச் சூழலுடன் சம்பந்தப்பட்ட தொன்றாகும். இக்கால்வாய்த்திட்டம் நிறைவேற்றப் படும் பட்சத்தில் பௌதீக ரீதியிலான பல பக்க விளைவுகளையும், சூழல்மாறுபாட்டையும் இலங்கையின் வடபகுதி எதிர்கொள்ளும் என எச்சரிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தை நிறைவேற்றவுள்ள இந்திய அரசோ இத்தகைய பாதிப்புக்கள் எவையும் ஏற்படமாட்டாது எனக் கூறுகின்றபோதும், இதில் பாதிப்பிற்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படு வோர் இது குறித்துத் திருப்தியடையக்கூடிய வகையில் இன்னும் அவை குறித்தவிளக்கம் அளிக்கப்படவில்லை.

அதாவது இத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படுவதாக எச்சரிக்கப்படும் யாழ். குடாநாட்டில் தாளக்கீழ் நீர் காலப்போக்கில் உவர்நீராகும் அபாயம் அதிகரிப்பு. இக்கால்வாய்ப் பகுதியில் காணப்படும் பவளப்பாறைகள் இக்கடற்பரப்பில் காணப்படும் அரியவகை மீனினங்கள் அழிந்து போகும் அபாயம் என்பன குறித்து உத்தரவாதம் எதுவும் இல்லை.

நதிகளை மறித்து அணைகளைக் கட்டுதல், மிகஆழமான கால்வாய்களை வெட்டுதல் என்பன பௌதீகச் சூழலில் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக ஏற்கனவே ஆய்வுகளும், அனுபவங்களும் வெளிப்படுத்தியிருக்கையில், சேது கால்வாய்த் திட்டம் குறித்து இந்தியா தரப்பு கூறுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல் என்பதும், அதனுடன் திருப்திப்பட்டுக்கொள்ளுதல் என்பதும் அறிவியலுக்கு ஒப்பானதாக இருக்கமாட்டாது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் உரிய அக்கறை காட்டியதாக இல்லை. இவ்வாறு நடந்துகொள்வதற்கு ஒருபுறத்தில் சேதுக்கால்வாய்த் திட்டத்தினால் பொருளாதாரம் தவிர்ந்த பாதிப்புக்கள் யாவும் தமிழர் பிரதேசங்களிலேயே ஏற்படக்கூடியதாக இருத்தல் காரணமாக இருக்கலாம். அத்தோடு சேதுக்கால்வாய்த் திட்டமானது நிறைவேற்றப்படும் பட்சத்தில் அப்பகுதியில் அதிகரிக்கும் இந்தியக் கடற்படையின் நடமாட்டம் கடற்புலிகளின் நடமாட்டத்தை அப்பிரதேசத்தில் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர உதவும் என்பதும் அது மீறப்படும் பட்சத்தில் இந்தியக் கடற்படை-கடற்புலிகள் இடையிலான நேரடி முரண்பாடுகள், மோதல்கள் தோற்றம் பெற வாய்ப்பை உண்டுபண்ணக்கூடும் என்றே எதிர்பார்ப்பும் இருக்கலாம்.

அடுத்ததாக மன்னார் குடாவில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்தல் தொடர்பான விவரமாகும். இந்திய மீனவர்கள் இன்று இலங்கையின் வட கடற்பரப்பில் வட பகுதிக் கரையோரத்தில் இருந்து சில கிலோமீற்றர் தூரம் வரையில் வந்து மீன்பிடித்துச் செல்கின்றனர். தாம் அத்து மீறிப்பிரவேசிப்பதை ஒப்புக்கொள்ளும் இவர்கள் தமது கடற்பரப்பில் மீன்வளம் அருகியதனால் தாம் இங்கு பிரவேசிப்பதாகக் கூறித்தமது நடவடிக்கையை நியாயப்படுத்த முனைகின்றனர்.

ஆனால் இந்திய மீனவர்களின் இந்நிலைக்கு இந்திய கடற்பரப்பில் ஏற்பட்ட மிகையான மீன்பிடியும் பொருத்தப்பாடற்ற மீன்பிடி முறையுமே காரணமாகும்.

அதாவது அதிகரித்த மீன்பிடியும், மீன்பிடிக்கு இழுவைப்படகுகளைப் பயன்படுத்தியமையுமே காரணமாகும். இதில் தொழிலாளர் பெருக்கத்திற்கேற்ப கடற்பிரதேசம் அதிகரிக்கப்படப் போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் தொழிலாளர் பெருகினாலும் கடல்வளத்தினைப் பாதுகாப்பது மீன் இனங்களை வளர்த்தெடுப்பதும் சாத்தியமானதே.

அடுத்ததாக இழுவைப்படகு மீன்பிடி முறையானது கடற்பரப்பில் உள்ள மீன் இனங்கள் அனைத்தையும் முற்றாகவே ‘வழித்தெடுத்துவிடுதல்’ போன்றதொரு வழி முறையாகும். இம்முறை நீடிக்குமானால் முற்றாகவே மீன் இனங்கள் அழிந்துபோகும் அபாயமுமுண்டு. இந்திய இழுவைப்படகுகளை அனுமதித்தால் இலங்கை வடபகுதியில் கடற்பரப்பிலும் இதுவே நடைபெறக்கூடும்.

ஆகையினால் இவை தொடர்பாக



மறுபரிசீலனையோ அன்றி ஆய்வோ செய்யப்படாது இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிகோருவது எந்தவகையில் பொருத்தப்பாடானதாகும். ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களோ இவ்விடயம் மனிதாபிமானமாகப் பரிசீலக்கப்படும் என்கின்றனர். அதாவது இந்தியா மீனவர்களுக்குச் சில சலுகைகளை வழங்க முன் வந்துள்ளது போல் உள்ளது.

வறுமையுடன் போராடும் தொழிலாளர் பிரச்சினைகள் மனிதாபிமானத்துடன் அணுகவேண்டியது உண்மையே. ஆனால் அவர்களுக்குக் காட்டும் மனிதாபிமானம் இலங்கைத்தமிழ் மீனவர்களை ஒட்டாண்டியாக்குவதாகவும் வடபகுதி கடல்வளத்தை அழிவிற்குள்ளாக்குவதாகவும் எவ்வாறு இருக்க முடியும். அடுத்ததாக வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்களுக்கு மனிதாபிமானம் காட்ட விளையும் சனாதிபதி சந்திரிகாவால் தென்னிலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு இத்தகைய மனிதாபிமானத்தைக் காட்ட முடியுமா? அவ்வாறானால் சனாதிபதி சந்திரிகாவின் பெருந்தன்மை போற்றத்தக்கதாகவே இருக்கும்.

ஆனால் அடிப்படையில் சனாதிபதி சந்திரிகாவின் மனிதாபிமானம் என்பது இலங்கைத்தமிழ் மீனவர்களிடையேயும் தமிழக மீனவர்களிடையேயும் நேரடியான பகையுணர்வை வளர்ப்பதற்கானதே. ஏனெனில் ஒரே கடற்பரப்பில் தமிழக மீனவர்களும் இலங்கை வடபகுதி மீனவர்களும் தொழில் நடவடிக்கையில் ஈடுபடின் மோதல் தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இரு தரப்பினரினதும் மீன்பிடிமுறையில் உள்ள வேறுபாடு ஒருதரப்பினருக்கு-குறிப்பாக இலங்கை வடபகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்குச் சேதம் விளைவிப்பது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும். இந்நிலையில் இரு தரப்பு மீனவர்களிடையேயும் முரண்பாடும், மோதலும் தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். இத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் இந்தியக்கடற்படையோ சிறிலங்கா-இந்தியக் கடற்படைகள் கூட்டாகவே இவ்விவகாரத்தைக் கையாளும் நிலையில் இ[illegible]ம் மீனவர்களுக்கிடையில் முரண்பாடு, இந்திய கடற்படையுடன் நேரடித்தொடர்புபட்டதாக மாறுதல் கூடும்.

இவ்வாறாக இவ்விவகாரமானது தமிழக-இல.தமிழ் மீனவர்கள் இடையிலானதும், இந்தியக்கடற்படையுடனும், தொடர்புபட்ட தாகவும் மாறுவதானது. இலங்கைத்தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் நிறை யவே உண்டு. இதன் விளைவானது இல.தமிழர், தமிழக மக்கள் இடையில் முரண்பாட்டையும் மோதல்களையும் உருவாக்கும் என்பதே சனாதிபதி சந்திரிகாவின் எதிர்பார்க்கையாகும்.

அடுத்ததும் முக்கியமானதுமான விடயம் இந்தியா-சிறிலங்கா இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தமாகும். இதன்மூலம் விடுதலைப்புலிகளுடனான இராணுவச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும் என்பது சிறிலங்கா அரசின் திடமான நம்பிக்கையாகவுள்ளது. இந்திய இராணுவத்தின் நேரடித்தலையீடு என்பதற்கு இவ் ஒப்பந்தம் வழிவகுக்கவில்லை எனக் கூறிக்கொள்ளப்படுவதாக இருந்தாலும், இவ் ஒப்பந்தம் மூலம் சிறிலங்கா அரசின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தேடிக்கொள்வதோடு, விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளும் கட்டுப்படுத்துவதற்குக் குறிப்பாக கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரமுடியும் என சனாதிபதி சந்திரிகாவின் எதிர்பார்க்கையாகும். அத்தோடு சிறிலங்கா முப்படைகளை நவீனப்படுத்தவும் பலப்படுத்தவும் உடன்பாடு உதவும் எனக் கருதப்படுகிறது.

இந்தவகையில் இந்தியாவின் நலன்களை இலங்கைத் தமிழருடன் நேரடியாகச் சம்பந்தப்படுத்துவதன்மூலம் இலங்கைத் தமிழருடனான முரண்பாட்டை வளர்த்தெடுத்து விடுவதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தற்போதைய தந்திரோபாகமாகவுள்ளது. அதாவது இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டம் இந்தியாவின் நலன்களைப் பாதிப்பதாகிறது என்ற நிலையில் இந்திய அரசின் உதவி யுடன் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதே சந்திரிகாவின் வியூகமாகும்.

இதன்காரணமாக சனாதிபதி சந்திரிகா இந்தியாவிற்கான விட்டுக்கொடுப்புக்களுடன் கூடியதான இராஜதந்திர செயற்பாடுகளுக்குத் தயாராகவுள்ளதாகவே அனுமானிக்க முடிகின்றது. ஆனால் இந்தியா தனது நலன்கள் குறித்த விடயத்தில் அக்கறையாக இருப்பினும் கடந்தகாலத்தில் சிறிலங்காவில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் குறித்தும் அது விழிப்புடன் இருப்பதாகவே கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இதன் காரணமாகவே சிறிலங்கா அரசு இவ் உடன்பாடு கைச்சாத்தாகும் விடயத்தில் காட்டும் தீவிரம் போன்று இந்திய மத்திய அரசு காட்டவில்லைப்போல் தெரிகின்றது. அது மட்டுமின்றி சிறிலங்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இந்திய ஆளும் வர்க்கத்திற்குள் சில முரண்பாடான அபிப்பிராயங்கள் இருப்பதாகவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.ஆர். இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்பாடு தோல்வியில் முடிவடைந்தமைக்கு இந்திய இராணுவத்திற்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் மட்டுமல்ல சிறிலங்கா ஆட்சியாளர்கள் உடன்பாடு தொடர்பாக விசுவாசமாக நடந்துகொள்ளாமையும் காரணம் என்பதை இந்திய அதிகார வர்க்கம் மறந்திருக்க வாய்ப்பில்லை.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் செயல்முறையும் இந்தியாவை இக்கட்டானதொரு கட்டத்திற்கு இட்டுச்செல்லாமல் பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியமானதாகும். அதாவது தமிழ் மக்களை வரலாற்றுப் பகையாளிகளுக்கும், செயற்பாட்டிற்கு இந்தியா துணைபோகுமானால் இப்பிராந்தியத்தின் எதர்கால அரசியலில் ஸ்திரத்தன்மை என்பது கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஜெயராஜ்

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு -கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம் [கார்ப்]

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல. 2043-SRI (SF)

(பகுதி C- சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்)

# கேள்வி அறிவித்தல் 03

# கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத்திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது, கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக்கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (CAARP) கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக்கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப்பணம் [ரூபா] |
|---|---|---|---|---|
| 01. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/05 (தொகுதி 1) | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் (தரம் 1) நிர்மாணம் | எம் 8 | 20000.00 |
| 02. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/05 (தொகுதி 2) | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் (தரம் 2) நிர்மாணம் | எம் 7 | 25000.00 |
| 03. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/05 (தொகுதி 3) | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் (தரம் 3) நிர்மாணம் | எம் 7 | 29000.00 |
| 04. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/06 | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சமயலறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | எம் 8 | 13000.00 |
| 05. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/07 | முழங்காவில் வைத்தியசாலையில் விடுதி (தரம் 3) நிர்மாணம் | எம் 8 | 15000.00 |
| 06. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/08 | பளை வைத்தியசாலையில் விடுதி (தரம் 3) நிர்மாணம் | எம் 8 | 15000.00 |
| 07. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/09 (தொகுதி 1) | பூநகரி வைத்தியசாலையில் விடுதி (தரம் 4) நிர்மாணம் | எம் 7 | 27000.00 |
| 08. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/09 (தொகுதி 2) | பூநகரி வைத்தியசாலையில் நீர்வழங்கலும், (தரம் 3) விடுதியும் நிர்மாணம் | எம் 7 | 25000.00 |
| 09. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/10 | பூநகரியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மீள்நிர்மாணம் | எம் 7 | 50000.00 |
| 10. | கேஎன்/கார்ப்/எச்எஸ்/11 | தர்மபுரம் வைத்தியசாலையில் 24படுக்கைகள் கொண்ட ஆண்களுக்கான தங்கும் விடுதி அமைத்தல். | எம் 6 | 70000.00 |
| 11. | கேஎன்/கார்ப்/ஆர்டி/02 | செம்மன்குன்று - பாலாவி - கிராஞ்சி வீதி (11.கி.மீ) புனரமைப்பு. | எம் 6 | 78000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்டவேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் 2003யூலை 1ஆம்திகதிக்குபின்பு தங்களைப்பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த ஒப்பந்தக் காரர்கள் இது போன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாக அல்லது உபஒப்பந்தக்காரர்களாக செய்திருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளரிடம் இருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப்பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

IV மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கோள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்விகள் கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்தவிடையமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை "கார்ப" திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும் அல்லது 2003 யூலை 1ஆம் திகதிக்கு பின்பு தங்களைப்பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக செய்திருந்தால் "கார்ப்" திட்டத்தின் கீழ் ஒருநேரத்தில் ஆகக்கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி தாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவனங்களை வடக்கு -கிழக்கு சமூதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்டசெயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்டப்பிரதி திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 2004 நவம்பர் மாதம் 08ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 19ஆம் திகதிவரை காலை 9.30லிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இதுதொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/= த்தை (கேள்விஆவனம்ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07. கேள்விகோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் 11 குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இதுதொடர்பாக பந்தி 8ல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம் கச்சேரி, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு 2004 நவம்பர் மாதம் 25ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி தாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று நவம்பர் மாதம் 15ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

தி.இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-10604)

## பொடோ சட்டத்தின் கீழ்

# ஒருவர் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை மற்றொருவருக் கெதிராகப் பயன்படுத்த முடியாது

### - மும்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பு

**பொடோ சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் ஒப்புதல் வாக்கு மூலத்தை இன்னொரு குற்றம் சாட்டப் பட்டவருக்கு எதிரான முக்கியசான்றாக பயன்படுத்த முடியாதென மும்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

ஆயினும் அவ் வழக்கில் உள்ள பல சான்றுகளை நிரூபிக்கவோ எதிர்க்கவோ அல்லது அதனுடன் சம்பந்தப்படுத்தவோ முடியுமென நீதிபதிகள் சிலர் கூறியுள்ளனர் இவ் ஆண்டு மும்பாய் குண்டு வெடிப்பு சம்பவத்தில் குற்றம் சாட் டப்பட்ட பதிறுதீ மீது இவ்வாறு தீர்ப் பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய-பாகிஸ்தான் சமாதான முயற்சி எல்லா நாடுகளுக்கும் ஊக்கமளிக்கிறது

### - சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களது கருத்து வேறுபாடு களைத் தீர்க்க எடுக்கும் முயற்சி இப் பகுதியிலுள்ள எல்லா நாடுக ளுக்கும் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறதென சிறிலங்கா சனாதி பதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

வலுவான தெற்காசிய சங்கம் என்னும் பிராந்திய அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். பிராந்தியப் பாதுகாப்பு ஒத்து ழைப்பை வலுப்படுத்தும் வழி வகைகளைக் காணுமாறு தெற் காசிய நாடுகளுக்குத் தெரிவித் துள்ளார். ஆயினும் தற்போதுள்ள பதற்றம் நிறைந்த சூழ்நிலையில் இத்தகைய ஒத்துழைப்பு ஏற்படு வது மிகவும் கடினம் என்றாலும் இன்றியமையாத ஒரு தேவை ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் உலகத் தலைவர்கள் பங்கேற்ற தலைமை முன் முயற்சி மாநாட் டில் கலந்து கொண்டு பேசிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ் வேளை 2006 ஆம் ஆண்டிற்குள் தெற்காசியக் கட்டுப் பாடற்ற வாணிப ஒப்பந்தத்தை செயற்படுத்துவது என்ற குறிக் கோளை அடைய வேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

# பெற்றோலிய விலை அதிகரிப்புக்கு இந்திய இடது சாரிகள் எதிர்ப்பு

இந்திய மத்திய அரசாங்கம் பெற்றோலிய பொருட்களின் விலைகளை அதிகரித்தமை முற்றிலும் நியாயமற்ற செயல் எனவும், இம் முடிவை ஐ.மு.கூட்டணி அரசு மறுபரிசீலனை செய்யாது விட்டால் பெற்றோலிய பொருட்களின் விலை அதிகரிப்பை எதிர்த்து நாடுமுழுவதும் போராட்டம் நடத்தப் போவதாக இடதுசாரி கட்சிகள் எச்சரித்துள்ளன.

பெற்றோலிய பொருட்களின் அதிகரிப்பை தங்களுடன் கலந்து ஆலோசிக்காமல் அரசு தனது முடிவை அறிவித்துள்ள தெனவும், இது மறுபரிசீ லனை செய்ய வேண்டும் மென சி.பி.ஐ.எம்., சி.பி.ஏ.போன்ற கட்சிகள் தனித்தனியாக தெரிவித் துள்ளன.

# பணிப்பெண்ணாக சவுதி சென்றவர் மர்மமான முறையில் மரணம்

சவுதியரேபியாவில் தொழில் புரியச் சென்று மிகவும் மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப் படும் இலங்கையைச் சேர்ந்த யுவதி ஒருவரின் சடலம் கட்டுநாயக்க விமான நிலையத் திற்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளது.

நேற்று பிற்பகல் சிறிலங்கன் விமான சேவையின் விமானப் பொருட்கள் தரையிறக்கப்படும் இடத்திற்கு இவரது சடலம் வந்து சேர்ந்துள்ளது. இவர் மதுவத்த என்ற இடத்தைச் சேர்ந்த 28 வயதுடைய கே.வின்சிகுமாரி என்பவர் ஆவார்.

இவர் கடந்த ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வீட்டுப்பணிப் பெண் ணாக பணிபுரிய சவுதி சென் றுள்ளார்.

இந்த யுவதி திடீரென உயிரி ழந்ததாக அவரது உறவினர் களுக்கு அறிவிக்கப்பட்டது.

அவரை சவுதிக்கு அனுப்பிய தொழில் முகவர் நிறுவனம் இது சம்பந்தமான எத்தகைய நடவடிக் கையினையும் எடுக்கமுடியாது. இருந்தது. இதனால் இந்த யுவதியின் சடலம் சவுதியில் இருந்துள்ளது. இலங்கை வெளி நாட்டு வேலை வாய்ப்புப் பணிய கமும் சவுதியின் இலங்கைத் தூதரகமும் இணைந்து இந்த சடலத்தை இலங்கைக்கு அனுப்பியிருந்தன.

# சபிண்டீகரண அழைப்பிதழும் நன்றி நவிலலும்



அமரர் சிவகுரு சண்முகம்

(கண்டாவளை இளைப்பாறிய தபால் ஊழியர்)

25.09.2004 அன்று காலமான எமது தந்தையார் சிவகுரு சண்முகம் அவர்களின் ஈமைக்கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க் கும், துண்டுப் பிரசுரங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்திப் பிரார்த்தனை 08.11.2004ஆம் திகதி நாளை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்தி பிரார்த்தனை யிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

* என் அன்புக்கினிய உற்றார், உறவினர்களே, நண்பர்களே தனிப்பட்ட அழைப்புக்கிடைக்காத பட்சத்தில் இதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அருளகம்,
அல்லிப்பளை,
பளை.

தகவல்:-
சன்சந்திரபாலன்
ஸ்ரீஅம்பாள் ரான்ஸ்போர்ட்,
உபதலைவர் வ.பி.பா.ஊர்தி,
உரி. கூட்டுறவுச்சங்கம்,
உபதலைவர் தனியார்,
பேருந்துக்கழகம் வன்னி.

(5246)

# எண்ணெய் விலை அதிகரிப்பின் காரணத்தை மக்கள் புரிந்துகொள்வர்

### - நிதியமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

பெற்றோலியப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை அரசிற்குக் கூறிய காரணங்களை மக்கள் புரிந்து கொள்வார்களென நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் டில்லியில் உலகத் தலைவர் மாநாட்டில் உரையாற்றிய வேளை இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் சர்வதேச எண்ணெய் விலைகள் குறையாது விட்டால் அதற்கு ஏற்ப வாழ்ந்திட மக்கள் பழகிக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# வீரவணக்கம்

தாயின் மடியில்
14 - 01 - 1977



தாயக மண்ணில்
07 - 11 - 2001

தமிழீழ தேசிய துணைப்படை வீரர்

## மோகன்

### யோகேஸ்வரன் மோகன்

நி.மு:- கோணாவில் கிளிநொச்சி

07.11.2001 அன்று ஆனந்தர்புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரச்சாவடைந் தார்.இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர் களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்

(5248)

# 05ஆம் ஆண்டு நிறைவு-நீங்காத நினைவாக

தாயின் மடியில்
28. - 02 - 1979



தமிழ்த் தாயின் மடியில்
07 - 11 - 1999

## கப்டன் பதஞ்சலி

### மாலதி படையணி (ம௦ பிரிவு)

### (சிதம்பரப்பிள்ளை-சுமித்திரா)

வீரத்தலைவன் விழி சிவக்க
ஓங்கி எழுந்த ஓயாத அலைகள்
வீரப்புலியாகி பகை மடி பாய்ந்தவளே
தீரமிகு மாலதி படை அணியில்
பதஞ்சலி ஏறும் நாமம் பெற்றாய்
களமதில் நீ இருந்து கருத்துடன்
வரைந்த மடல் அன்புள்ள அப்பா,
அம்மா, அம்மம்மாஅருமையிரு
சகோதரர்கட்காகவும் மட்டுமல்ல
தமிழ்த்தாயின் மானம் காப்பதற்காகவும்
புயலாகிப் போனேன் என்றாய்
உன் மாடல் கண்டு நாம் வியக்க
உன் தோற்றங்கள் களத்தில் நினைவெடுக்க
மண்மானம் காக்க மண்மடிநீசாய்ந்தாய்
பிறப்பு என்றநான்கு எழுத்து இருந்தால்
இறப்பு என்ற நான்கு எழுத்திருக்கும்
இறப்பு உன்னிடம்இல்லையே ஏனெனில்
வீரர்கள் சாவதில்லை சாவிலும் புதிய
சரித்திரமாய் பிறந்திருப்பார்கள்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

ஐந்தாம் ஆண்டு நினைவலையில்நினைவு கொள்ளும்அன்புள்ள

ச.சிதம்பரப்பிள்ளை
குடும்பத்தினர்
இல.113/3 சிறுகுடில்வாசா
திருவையாறு
கிளிநொச்சி.

(5241)

# பங்களாதேசுக்கு எதிரான 2 ஆவது ஒரு நாள் போட்டி; நியூசிலாந்து அணிக்கு மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி



பங்களாதேசுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பகல் போட்டியாக நடை பெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடி 43.4 ஓவரில் 146 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஹலிஸ் மசூட் 46 ஓட்டங்களையும், றாஜன் சலீம் 26 ஓட்டங்களையும் அதிக பட்சமாகக் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹயில் மில்ஸ் கெயின்ஸ், பிராங்லின் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கொட்டைரிஸ் 3 விக்கெட்டுகளையும், டானியல் விக்டோரி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி மிகவும் தடுமாறி தடுமாறி 44.4 ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மத்யூசின் கிளயர் 62 ஓட்டங்களையும், நதன் அஸ்டல் 29 ஓட்டங்களையும்



கிறிஸ்கொய்ன்ஸ் 17 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்து வீச்சில் அக்தா அகமட் பத்து ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

மேற்படி வெற்றி மூலம் போட்டித் தொடரில் நியூசிலாந்து 2-0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றது.

# பாக். எதிரான ஒரு நாள் போட்டியில் இந்திய அணியில் சிறிதரன் சிறிராம்

இந்திய கிரிக்கெட் அணியில் தமிழினத்தின் மிகச் சிறந்த சகல துறை வீரர்களில் ஒருவரான சிறிதரன் சிறிராம் இணைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் இந்திய அணிகளுக்கிடையிலான இந்திய கிரிக்கட் சபையின் 75 ஆம் ஆண்டு நிறைவு தினத்தைச் சிறப்பிக்கும் வகையிலான போட்டி அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி.கிண்ணப் போட்டியில் விளையாடிய அணியில் இருந்து ஒரே ஒரு மாற்றம் ரொகான் கவாஸ்கர் நீக்கப்பட்டு சிறிதரன் சிறிராம் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்திய அணித் தலைவராக விளையாடுவாரா என்பது இன்னமும் உறுதியாகாத நிலையிலும் கங்குலியே தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள சோதனையின் பின்னரே அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவாரா என்ற இறுதி முடிவு தெரியவரும்.


# இர்பான் பதான் மீண்டும் அணியில்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டியிலும் காயம் காரணமாக விளையாட முடியாது போன இந்திய அணியின் இளம் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

உபாதையின் பின்னர் இரண்டு உள்ளூர் போட்டிகளில் விளையாடியுள்ள பதான் பூரண குணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஷேன்வோர்ன் பங்கேற்பது சந்தேகம்



நியூசிலாந்து சுற்றுலாவில் பங்கேற்பதற்கு 50 வீத வாய்ப்புகளையே கொண்டிருப்பதாக அவுஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

பெருவிரலில் ஏற்பட்ட காயம் விரைவில் குணமடையும் என்றும் இதன் மூலம் நியூசிலாந்து போட்டித்தொடரில் கலந்துகொள்ள முடியும் என்றும் வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மும்பாயில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கையில் பெருவிரலில் காயம் ஏற்பட்டதால் இந்தியாவுடனான நான்காவது டெஸ்ட்டில் வோர்ன் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் வோர்ன் அவுஸ்திரேலியா திரும்பினார். நியூசிலாந்து, அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் இம்மாதம் 18ஆம் திகதி பிறிஸ்பேர்னில் ஆரம்பமாகவுள்ளது

அவுஸ்திரேலிய அணியின் உடல் கூற்று வல்லுனர் ,எரல் அல்கொட் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், வோர்னின் பெருவிரலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அவர் ஐந்து முதல் ஏழுவாரங்கள் வரை ஓய்வுபெற வேண்டியிருக்குமெனத் தெரிவித்துள்ளார்.

# பிரைஸ் வோட்ட ஹவுஸ் தரப்படுத்தல் முதலிடங்களில் ராவிட், ஹார்மிஷன்



பிரைஸ் வோட்ட ஹவுஸ் சுப்பர் நிறுவனம் டெஸ்ட் தர வரிசை பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பந்து வீச்சில் சிறிலங்காவின் நட்சத்திர சுழற்பந்து வீசசாளர் முத்தையா முரளிதரனுக்கு மூன்றாவது இடமும், துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்காரவுக்கு பத்தாவது இடமும் கிடைத்துள்ளது.

பந்து வீச்சில் 875 புள்ளி களை பெற்று முதல் இடத்தில் இங்கிலாந்தின் ஸ்ரிவ் ஹார்மிசனும், இரணடாம் இடத்தில் தென்னாபிரிக்க வீரர் ஷேன்பொலக் 854 புள்ளிகளுடனும், முரளிதரன் 850 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளனர். துடுப்பாட்டத்தில் இந்தி யாவின் ராகுல் ராவிட் முதலிடத்திலும், இரண்டாவது இடத்தில் மேற்கிந்திய தீவின் பிரைன் லாறாவும், மூன்றாம் இடத்தில் அவுஸ்திரேலியாவின் மத்யூ ஹெயடனும் இடம்பெற்றுள்ளனா.



பந்து வீச்சில் முன்னணியில் திகழும் அவுஸ்திரேலிய வீரர் எவரும் முதல் மூன்று இடங்களிலும் இடம் பெறாதமை குறிப்பிடத்தக்கது.

# உலக டென்னிஸ் சம்பியன் போட்டியில் விளையாட அமெரிக்காவின் செரீனா ஆர்வம்



பெண்களுக்கான டென்னிஸ் போட்டித் தொடரில் உள்ளூர் போட்டியொன்றில் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் உக்ரேயினின் ஜீலியானா பெடக்கை 6-4,2-6,7-6 என்ற செட்கணக்கில் வென்று 585 ஆயிரம் டொலரை வென்றுள்ளார்.

இதன்மூலம் பெண்களுக்கான உலக டென்னிஸ் சம்பியன் போட்டிகளில் பங்கேற்க அவர் கண் வைத்துள்ளார். மேலும் 6 வீராங்கனைகள் இப்போட்டித் தொடருக்கு தகுதி பெற்றுள்ளனர்.

தற்போது இறுதிப் போட்டிக்கு வீனஸ் வில்லிம்ஸ், செரீனா வில்லியம்ஸ், ஜனிபர் கப்ரியாட்டி விராஸ்வனரிலா ஆகியோர் தகுதி பெறும் நிலையில் உள்ளனர்.

செக்குடியரசின் இலட்டா பெனிசோலாவை 6-2 ,6-7 என்ற கணக்கில் வென்ற அமலி மோரிஸ்மோவை காலிறுதிப் போட்டியில் சந்திக்க வீனஸ் வில்லியம்ஸ் தகுதி பெற்றுள்ளார், மோரிஸ்மோ இப்போட்டித் தொடரில் 14 தடவை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

காலிறுதிப் போட்டிக்கு பிரான்சின் அனஸ்டனியாவும் தகுதி பெற்றுவிட்டார். இவர் பராகுவே வீராங்கனை ரொசனா ஹப்பாடி லோஸ்றியசை 6-4,7-6 என்ற கணக்கில் வென்றுள்ளார்.

# மாஸ்ரர் கிண்ண டென்னிஸ் தொடர் வாய்ப்பை இழந்தனர் ரொடிக், கென்மன்

ஹூஸ்டனில் நடைபெற விருக்கும் "மாஸ்டர்கப்" டெனிஸ் போட்டி 3வது சுற்றில் தற்போதைய சம்பியனான ரிம்கென்மனும், அன்டிரொடிக்கும் தோல்வியை சந்தித்துள்ளனர்.

கடந்த வியாழனன்று நடைபெற்ற இப்போட்டியில் பலாரஸ் வீரர்மெக்ஸ்மர்னியி ரொடிக்கை 7-6, 6-2 என்று செட் கணக்கில் வென்றார் அமெரிக்கரான ரொடிக் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்குப் பின்னர் தனது திறமையிலிருந்து நழுவிவிட்டார்.

இன்னும் ஒரு போட்டியில் ஹோல்டன் கெல்மன் ரஷ்யவீரர் மிக்கேல் யூஸ்னியிடம் 7-5, 6-1,என்ற கணக்கில் தோல்வியைத் தழுவினர்.

பிரஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்கு முன்பு கென்மன் திறமை யுடன் செயற்பட்டிருந்தாலும் தற்போது அவர் தோல்வியைச் சந்தித் துள்ளார்.

யுஸினி கடந்த 2002ஆம் ஆண்டு டேவிஸ் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த வீரராவார்.




# பீஜிங் ஒலிம்பிக் போட்டி 8 எண்ணில் ஆரம்பிக்கத் திட்டம்


வரும் 2008ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை 8 என்ற என்னுடன் சம்பந்தப்படுத்தி ஆரம்பிப்பது என தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதன் படி போட்டிகள் 2008 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 8 ஆம திகதி பிற்பகல் 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தெரிவிக் கப்பட்டிருக்கிறது இப் போட்டிக்காக சீனா பெரும் தொகை பணத்தை செலவிட்டு தயார்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி

மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இம்மாதம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்படவுள்ள மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இம்மாதம் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்றுவதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் சகல கிரிக்கெட் அணிகளையும் விளையாட்டுத்துறைச் செயலகத்தில் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கிளிநொச்சி பொது மைதானத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பதிவினை மேற்கொள்ளமுடியும். (ச)

# முதல் இந்திய வீரர் என்ற சாதனை நோக்கி கும்ளே



இந்திய-கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளேக்கு டெஸ்ட் போட்டி ஒன்றில ஆகக் கூடுதலான விக்கெட்டுக்களை கைப்பற்றிய இந்திய வீரர் என்ற பெருமையை பெறுவதற்கு இன்னும் 8 விக்கெட்டுக்கள் தேவைப்படுகின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சிறப்பான பந்து வீச்சு அவரை விரைவாக இந் நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

இது வரை 425 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ள கும்ளே கபில்தேவின் 434 விக்கெட்டை கைப்பற்றினால் முதல் இடத்தைப் பெறுவார்.

தற்போது டெஸ்ட் விக்கெட் வீழ்த்தியோரில் கும்ளே ஏழாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து போட்டி யாழ்.மாவட்டத்தில் நேற்று ஆரம்பம்


தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் உதைபந்தாட்டப்போட்டியொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற் கரும்புலித் தாக்குதல் இடம்பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமைதானத்தில் நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்கு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் நாள் ஆட்டம் இடம்பெற்றது.

இரு சுற்றுகளாக இடம் பெற்ற முதலாம் நாள் போட்டியில் ஞான முருகன் விளையாட்டுக் கழகமும்,வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டியிருந்தன.

இறுதிச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி இதே மைதானத்தினில் இடம் பெறுமென போட்டி ஏற்பாட்டுத்துறையினர் தெரிவித்தனர். (27,33)

## சிந்தனைக்கு



வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-11-2004

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## தயாராக வேண்டியது அரசே!

"இலங்கையின் சமீபகால நிகழ்வுகளைப்பார்க்கையில் விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர முடியும" எனச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா இந்தியாவில் வைத்து நம்பிக்கை வெளியிட்டுள்ளமை சற்று குழப்பகரமானதாகவே உள்ளது.

ஏனெனில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வர எப்பொழுது மறுப்புத் தெரிவித்தனர்? தற்பொழுது மீண்டும் பேச்சுவார்த்தைக்குவர விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தியுள்ள மாற்றம் தான் என்ன?

விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தானதில் இருந்தே பேச்சுவார்த்தைக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தே வந்துள்ளனர். இதன் பிரகாரம் ஆறு சுற்றுப்பேச்சுவார்ததைகளை அரசாங்கத்துடன் நடாத்தியும் இருந்தனர். ஆனால் பேச்சு வார்த்தைகளினால் தமிழ் மக்களுக்கு பயன்கிட்டாத நிலையில் அதில் பங்கேற்பதை இடை நிறுத்தினர்.

அதன் பின்னர் தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளை உடனடியாக நிறைவேற்றக் கூடியதான பேச்சுவார்த்தைகளை எப்பொழுதும் ஆரம்பிக்கத் தயாராக இருந்ததோடு இப் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தையும் முன்வைத்தனர். இதனடிப்படையில் பேச்சுக்களை நடத்த ஓராண்டிற்கும் மேலாகப் புலிகள் காத்திருக்கின்றனர் என்பதே நிதானமானதாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தான் பேச்சுவார்த்தைக்கு தயாரான ஐ.தே.கட்சி அரசாங்கம் கலைக்கப்பட்டது. பின்னர் தேர்தல் மூலம் ஏதோ ஒருவகையில் அவரால் அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் முடிந்தது. ஆனால் பேச்சுவார்த்தையை அவரால் முன்னெடுக்க முடியவில்லை. அதாவது பேச்சுவார்த் தைகளை ஆரம்பிக்க சனாதிபதி சந்திரிகாவினால் முடியவில்லை.

இவ்வாறு முடியாமல் போனமைக்குக் பல காரணிகள் இருத்தல் கூடும். இதில் குறிப்பாக ஆளும் கூட்டணிக்குள் ஒருமைப்பாடு இன்மை முக்கிய காரணமாக இருந்தது. இந்நிலையே தற்பொழுதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அதாவது சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அடிக்கடி பேசினாலும் அவரால் சமாதானப்பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க முடிய வில்லை.

சிறப்பாகக் கூறுவதானால் சனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும் வெளிநாட்டுப்பிரதிநிகள் அனைவருமே அவர் சமாதான முயற்சிகளில் ஆர்வமாக இருப்பதாகவே கூறிகின்றனர். ஆனால் சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நகர்வுகள் எவையும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

அது மட்டுமல்ல சமாதானம் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்ற ஜே.வி.பி.யின் குரலே ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதாவது சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க சமாதானப் பேச்சுக்களை விரும்புகிறரே தொடர்பான தெளிவானதும், உறுதியானதுமான நிலைப்பாட்டில் உள்ளது. இதில் மீண்டும் கொண்டுவருதல், திரும்புதல் என்பது போன்ற கூற்றுக்கள் அர்த்தமுடையனவையாக இல்லை. புலிகள் என்றும் தயாராக உள்ளனர் என்பதே யதார்த்தமானதாகும்.

ஆகையினால் தமக்கிடையிலான முரண்பாடுகளைக்கடந்து பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டியவர்கள் ஆட்சியாளர்களே- குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவே ஒழிய புலிகள் அல்ல. சனாதிபதி பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படும் எனக் கூறுவதாலோ, தயாராக இருப்பதாகக் கூறுவதாலோ அவர்-அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசைக்குவரத்தயாராகி விட்டதென அர்த்தமில்லை. ஆகையினால் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டுமானால் முதலில் தயாராக வேண்டியவர்கள் ஆட்சியாளர்களே. இதனை விடுத்துப் புலிகளை தயார்ப்படுத்துதல் என்பது யதார்த்தத்திற்கும் முரணானது சமாதான முயற்சிகளுக்கும் முரணானது.

### 10 வருடங்களுக்கு மேலாக சிறையில் இருக்கும்

# தமிழ் இளைஞரை விடுவிக்க சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

நல்லரத்தினம் சிங்கராசா என்ற தமிழ் இளைஞர் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் இவர் விடுதலை செய்யப்படவேண்டும். அல்லது இவர் மீதான வழக்கு விசாரணை மீண்டும் நடத்தப்படவேண்டும் என்று அனைத்துலக பொது மன்னிப்பு ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக கொழும்பு வழக்கறிஞர் கணேசலிங்கம் பி.பி.சிக்கு கூறுகையில், இவர் 1993 ஆம் ஆண்டு ஆடிமாதம் 16 ஆம் திகதி இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். இதன் போது இவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு வழக்கை எடுத்து நீதிமன்றம் விசாரித்து 50 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை வழங்கியது.

இவ்வாறு 50 ஆண்டுகால சிறைத்தண்டனையை வழங்குவதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட முதலாவது வழக்கில் மூதூர். பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுடன் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும்; இரண்டாவது வழக்கில் இராணுவ உத்தியோகத்தரை அருந்தலவ என்ற இடத்தில் வைத்து கொலை செய்தமை என்றும், மூன்றாவது வழக்கில் சட்டவிரோதமாக (பெயர் சொல்ல முடியாத) வேறு ஆட்களுடன் சேர்ந்து 4 இராணுவ முகாம்களைத் தாக்கியமை தொடர்பாகவே உயர் நீதிமன்றத்தில் 50 வருட சிறைத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த போது 35 வருடமாக சிறைத் தண்டனை குறைக்கப்பட்டது. இவர் மீது இத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அனைத்துலக பொது மன்னிப்புச் சபை ஏன் விடுதலை செய்யக் கோருகின்றது என்று கேட்டதற்கும். 35 வருட தீர்ப்பு வழங்கிய போதும் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்த போது அது நிராகரிக்கப்பட்டது. அதன் காரணமாக ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகள் குழுவிற்கு முறைப்பாடு செய்த போது அவர்கள் இவருக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறப்பட்ட காரணத்தினால் அவரை விடுதலை செய்ய வேண்டும். அல்லது மீண்டும் ஒரு விசாரணை நடத்த வேண்டும். அத்துடன் நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும் என்றும் நீதியான விசாரணை கிடைக்கவில்லை என்றும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்தப் பயங்கரவாதச் சட்டத்தின் கருத்துக்கள் உலக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டத்திற்கு ஏற்புடையதாக இல்லை. இவருக்கு எதிரான சாட்சியம் எனும் போது பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்ட போது பொலிசாருக்கு செய்த வாக்கு ஒப்பு உறுதி பத்திரத்தை வைத்து வழக்கை தாக்கல் செய்தார்கள். சாட்சியம் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும் போது அவருடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிந்தவரும் தட்டச்சு செய்தவரும் அவர் தமிழில் சொன்னதை சிங்களத்தில் மொழி பெயர்த்த இரண்டு பேருமே சாட்சியாளராக இருந்தனர் எனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர வேறு எந்த விதமான சாட்சியமும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் இது தொடர்பாக சட்டமா அதிபருக்கு எழுத்து மூலமாக மனு சமர்ப்பித்த போதிலும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென்று கொழும்பு வழக்கறிஞர் கணேசலிங்கம் பி.பி.சி.க்கு தெரிவித்துள்ளார்.

# 2006 அக்டோபர் 12வரை சனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது

-சனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

2006ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் திகதி முடிவடையும்வரை சனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு அரசியல் யாப்பில் இடம்மில்லை என சனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ கூறியுள்ளார் சனாதிபதி பதவிக்காக பாராளுமன்றத்தை இதில் சம்பந்தப்படுத்த வேண்டாம் .சனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை. இந்தச் சட்ட அதிகாரங்கள் யாவும் அரசயாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதென சனாதிபதி சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# மின்சார பொறியியலாளர் மீதுதாக்கு கேகாலையில் மின்சார ஊழியர் போராட்டம்

(கேகாலை)

மின்சாரசபையினரின் வேலை நிறுத்தம் மத்தியமாகாணம் முழுவதும் இடம் பெறுகின்றது.

கேகாலைப் பிரதேச மின்சார பொறியியலாளர் மீது தாக்குதல் நடத்திய நபரை பொலிசார் கைது செய்திருப்பதை ஆட்சேபித்து இந்த வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

68 ஆயிரம் ரூபா வரையிலான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாது இருந்த உணவுச் சாலை ஒன்றிற்கான மின்சார விநியோகத்தை துண்டிப்பதற்காக மின்சார பொறியியலாளர்கள் பல ஊழியர்களுடன் சென்றிருந்த போதே அவர்கள் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்டவர் தற்பொழுதும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் தாக்குதலை நடத்தியவர்களில் ஒருவரை கைது செய்திருப்பதாகவும் முக்கியமான மற்றுமொரு நபரை இன்னமும் கைது செய்யவில்லை. எனவே அந்நபரை கைது செய்யாது விட்டால் வேலை நிறுத்தம் ஏனைய பிரதேசங்களிலும் இடம் பெறும் என்று ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபரைக் கைதுசெய்யவென 6 பொலிசார் அடங்கிய குழுவொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# மட்டு.காத்தான் குடிப்பகுதியில் இடையிடையே வன்முறைகள்

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் இடம் பெற்ற கலவரத்தையடுத்து அமைதி நிலை தோன்றிய போதிலும் இடையிடையே வன்முறைகள் இடம் பெற்று வருகின்றது.

புனித ரம்ழான் நோன்பு காலத்தை முன்னிட்டு வியாபார நிலையங்களைத் திறக்கும்படி சுபி அப்துல் உலாமாசபை விடுத்த வேண்டுகோளையடுத்து சகல வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு வழமைபோன்று வியாபார நடவடிக்கைகளும் இடம் பெற்றது. அதே வேளை நேற்று முற்பகல் அகிலஇலங்கை இஸ்லாமியப் பேரவைத் தலைவரான ராப்மௌலவியின் சகோதரியின் வீட்டின் மீதும் அடையாளம் தெரியாத நபர்கள் கைக்குண்டு வீசித்தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது வீட்டில் எவரும் இருக்கவில்லையென்றும் வீட்டின் முன்பகுதி சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக முகம்மது குசைன் என்ற இளைஞன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவானின் உத்தரவின் பேரில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அன்றையதினம் அடையாள அணிவகுப்பில் அவரை ஆஜர்ப்படுத்துமாறு பொலிசாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# அயலவர்களுடன் உறவாடி மோசடி செய்தோரை கலாச்சாரம் பேணும் குழுவினர் பிடித்தனர்

(நல்லூர்)

அயலவர்களுடன் உறவாடி மோசடிகள் செய்து வந்தவர்களை கலாசாரத்தைப் பேணும் குழுவினர் பிடித்து மோசடிகள் செய்த பொருட்கள், பணம் என்பவற்றை மீளப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

கோப்பாய் மத்திப் பகுதியில் வவுனியாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் இடம் பெயர்ந்து வந்ததாகக் கூறி அங்கு இருந்துள்ளார்கள்.

இவர்கள் அயலில் உள்ள மூன்று குடும்பத்திடம் திருமண வீட்டிற்குச் சென்று வருவதாகக் கூறி சுமார் 75 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டு வீட்டில் இருந்து நைசாக மாறிவிட்டார்கள்.

சில நாட்களின் பின்னரே அக்குடும்பம் தங்கள் நகைகள், பணத்துடன் ஏமாற்றி விட்டுத் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்ற விடயம் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து பணம், நகைகளைக் கொடுத்தவர்கள் நல்லூர் பிரதேசசபை கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் தொடர்பு கொண்டுள்ளனர்.

கலாசாரத்தைப் பேணும் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து உரியவர்கள் இனம் காணப்பட்டு நகைகள், பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் உரியவர்களும் சொந்த இடத்திற்கு செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து எச்சரித்துள்ளனர். (41)



திருவையாறு பகுதியில் விபத்துக்குள்ளான ஊர்திகள் (செய்தி 2 ஆம் பக்கத்தில்)

# சிறிலங்கா புலனாய்வுத்துறை பயன்படுத்திய வாகனங்களை ஒப்படைக்க உத்தரவு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில், படைத்தரப்பின் புலனாய்வுத் துறையினரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களை மீளக் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு படைத்துறை தலைமையகத்தால் விடுக்கப்பட்டுள்ளதாகவும்; மாதாந்த வாடகைக் கொடுப்பனவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இந்த வாகனங்களை,இன்றைய தினத்துடன் உரிய தரப்பினரிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை, கிழக்கு மாகாணத்தில் செயற்படும் படைப் புலனாய்வுத் துறையினரின் வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட அதிகாரிகளின் கடமைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள புலனாய்வுத்துறை அதிகாரிகளின் வாகனங்கள் இவ்வாறு மீளப் பெறப்பட்டுள்ளமையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் படைத்துறை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் பின்னணி குறித்த தகவல்கள் இதுவரை வெளியாக வில்லை. (32)

# கால் நடை வைத்திய அலுவலகம் செட்டி குளத்தில் திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

நிகொட் திட்டத்தின் செட்டி குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரச கால்நடை வைத்திய அலுவலகத் திறப்புவிழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் வைத்தியர் சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர்,வவுனியா அரச அதிபர் க.கணேஷ்,வவுனியா மாவட்ட நிகொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் கிருபாசுதன், செட்டி குளம் பிரதேச செயலர் செல்வி சுகந்தி துரைச்சாமி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அடுத்து கால்நடை வைத்திய அலுவலகத்தினைப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். கால்நடை வைத்திய அலுவலக பெயர்ப் பலகையினை நிகொட் பிரதித் திட்டப்பணிப்பாளர் கிருபாசுதன், பிரதேச செயலர் செல்வி. சுகந்தி துரைச்சாமி ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர். இறுதியாக விருந்தினர் உரை இடம் பெற்றது. (10)

## கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுவன் பரிதாப மரணம்

(உடையார் கட்டு)

உடையார்கட்டு கொலணிப் பகுதியில் கடந்த புதன்கிழமை சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக மரணமானார்.

சம்பவ தினம் மேற்படி சிறுவன் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பியபின் விளையாட்டாக கிணற்றை எட்டிப் பார்க்கச் சென்ற வேளையே இது நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. புதிதாக வெட்டிப் பாவனையில் உள்ள மண் கிணற்றுப் பகுதியில் ஏற்பட்ட புதைவு இச் சம்பவத்திற்குக் காரணமாக அமைந்தது. மேற்படி கிணற்றில் வீழ்ந்து மரணமான சிறுவன் சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலையின் மாணவனான செ.மயூரன் ஆவார். (19)

## கடந்த மாதத்தில் மாத்திரம் குழு மோதல்களில் 22 பேர்பலி

கடந்த மாதத்தில் மாத்திரம் தென் மாகாணத்தில் 22 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒன்பது பேர் மாத்தறையிலும் ஆறு பேர் காலியிலும் ஏனையோர் அம்பாந்தோட்டையிலும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

குழு மோதல்களிலேயே பெரும்பாலானவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். (32)

## வடக்குக் கிழக்கைப் பிரிக்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்

*–பிரதி அமைச்சர் சேகுஇஸ்ஸதீன் தெரிவிப்பு*

வடக்குக்கிழக்கைப் பிரிக்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே சிறந்தது எனப் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

இணைந்த வடக்குக்கிழக்கிலே நிலத் தொடர்பற்ற முஸ்லிம் பிராந்திய சுயாட்சியே சுமூகமான தீர்வாக அமையுமெனவும் பிரான்ஸ நாட்டு தூதுக்குழுவைச் சந்தித்து பேசியபோது பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியில் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் கை கோர்க்க வேண்டுமெனவும், முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை இறுதித்தீர்வாக அரசும் புலிகளும் ஏற்றுக்கொண்டால் தனித்தரப்பு கோரிக்கை அவசியமற்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

### இளைஞன்...

6.00 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த யோகரட்ணம் விஜயகரன் (வயது 22)என்பவரே காயமடைந்துள்ளார்.

### மருதனார்...

பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவில்லை.

மின்சார சபை உயர் உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் சுமார் ஒன்றரை மணித்தியாலம் கழித்தே உரிய இடத்திற்கு சமுகம் கொடுத்து மின்சாரத்தைத் துண்டித்தனர்.

இச்செயல் காரணமாக ஆத்திரம் அடைந்த மக்கள் மின்சார சபை ஊழியர்களின் இப் பொறுப்பற்ற செயல் காரணமாக ஆத்திரமடைந்து ஊழியர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் இவர்களின் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கையை நேரிலும் கண்டித்துள்ளனர். (41)

### புதுக்குடி...

இருக்கின்றன.

இதேவேளை மாத்தளன் கடல் வெளி வீதியால் வெள்ளம் மூடிப் பாய்ந்து கொண்டு இருப்பதால் அம்பலவன்- பொக்கணை புது மாத்தளன பழைய மாத்தளன் உட்பட பல கிராம மக்கள் போக்குவரவு செய்ய முடியாமல் படகுகள் மூலம் புதுக்குடியிருப்புக்கு வர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் அப்பகுதி பல.நோ.கூ சங்கத்துக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இவ் வருடம் பெரும் மழை பெய்ததை அவதானிக்க முடிந்தது வெள்ளப்பெருக்கு காரணமாக சில பகுதிகள் தற்பொழுதும் மூடியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நேற்றும் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட சேதங்களை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் சென்று பார்வையிட்டதை அவதானிக்க முடிந்தது. இதேவேளை முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதியில் மழை வெள்ளம் புகுந்ததில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (20,08)

### விபத்தில்...

ஏ-9 பிரதான வீதியில் மாங்குளத்திற்கு அண்மித்த பகுதியான பனிச்சங்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. புளியங்குளத்திலிருந்து வந்து கொண்டிருந்த கைஎஸ் வாகனமும் கிளிநொச்சியிலிருந்து சென்று கொண்டிருந்த உந்துருளியுமே மோதிக் கொண்டது.

இச்சம்பவத்தின் போது உந்துருளி ஓட்டுனரான சிங்கராய குலம் சிவகுமார் (வயது 35) என்பவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தின் மேலதிக விசாரணைகளை மாங்குளம் காவல் பணிமனை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

### குருநாகல்...

கிரியைகளை நடத்தி சைவ சமயத்திற்கு பிரதியமைச்சரும், தற்காலிக அதிபரும் இழுக்கை ஏற்படுத்தியுள்ளனர். அது மட்டுமல்லாமல் குருநாகல் சைவ மகா சபைத் தலைவரான க.கந்தசாமி, தேரரின் இறுதிக் கிரியைகளை நடத்த பணத்தைத் தான் தருவதாகவும், அதை வேறு இடத்தில் நடத்தும் படியும், விநாயகர் ஆலயம் முன்பாக ஈமக்கிரியைகள் நடத்துவது முறையல்ல எனத் தெரிவித்தும், பிரதியமைச்சரின் ஆதரவாளர்கள் கோயிலை துணியால் மூடியபின் ஈமக்கிரியைகளை நடத்தியுள்ளனர். இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இதை உடனடியாக அறிவித்தும், அவராலும் இதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனதாக சைவ மகாசபைத் தலைவர் க.கந்தசாமி தெரிவித்தார். தற்போதும் வித்தியாலய மைதானத்தில் இறந்த தேரரின் சாம்பல் காணப்படுகின்றது.

*–ஈராக்கிய தீவிரவாதிகளால்–*

## கைதான இலங்கையரை விடுவிக்க தீவிர முயற்சி

ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையினரான தினேஸ் தர்மேந்திராவை ஈராக்கில் தீவிரவாதிகளிடம் இருந்து விடுதலை செய்யும் முகமாக இலங்கையின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விஸ்வவர்ணபால ஈராக்கிலுள்ள சன்னி முஸ்லிம் தலைவரை சந்திக்கவுள்ளார். கடந்த ஒருவாரத்திற்கு முன்னர் கைது செய்யப்பட்ட குவைத் நிறுவன மொன்றில் பணிபுரிந்த இலங்கைய ஈராக்கிய தீவிர வாதிகள் கைது செய்யப்பட்டிருந்தமை அறிந்ததே. (32)

## இலங்கையில் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைகின்றது

இலங்கையில் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றின் போது இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றது. சப்ரகமுவ மாகாணத்தில் வாசிப்புப் பழக்கம் மிகவும் மந்த கதியில் இருப்பதாகவும் 23.7 வீதமானவர்களே வாசிப்புப் பழக்கம் உடையவர்களாகக் காணப்பட்டிருக்கின்றனர். ஊவா மாகாணத்தில் அதிகளவான வாசிப்புப் பழக்கம் உடையோர் இருப்பதாகவும் இங்கு 48.4 வீதமானவர்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.